Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நிலவு.com வெளியீடுகள்
இதயம் குளிரும் இணையம்
DREAM SOLUTIONS PVT LTD
The Solutions People
The King Of Multimedia

சுயகற்றலுக்கான தமிழில் பல்லூடக குறுவட்டுக்கள்

Ms-Word-xp Pagemaker Java
Ms-Excel-xp PhotoShop TCP/IP
PowerPoint-xp CorelDraw SQL
Ms-Access-xp Macromedia Flash Thirukkural
Ms-FrontPage-xp Computer Hardware Thamizha
Ms-Visual Basic 3D-Studio Max. இன்னும் பல...

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1423 முஹர்ரம் 11 (21.02.2005) திங்கட்கிழமை இதழ்: 144

## வீட்டுக்குள் இருந்த யுவதியை காரில் வந்தவர்கள்கடத்தினர்!

### சங்கானையில் பரபரப்புச் சம்பவம்

(சங்கானை)

கத்திகள், வாள்கள் போன்ற ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் காரில் வந்த குழுவினர் - சங்கானையில் வீட்டினுள் இருந்த யுவதியைக் கடத்திச் சென்றனர்.

இந்தப் பரபரப்பான சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் சங்கானை - வல்லை வீதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடத்தப்பட்ட யுவதி தனது தாயாருடன் தனித்து வீட்டில் தங்கியிருந்தபோது நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கதவைத் தட்டித் திறக்குமாறு கோரியுள்ளனர்.

இதையடுத்து குறித்த யுவதியின் தாயார் கதவைத் திறந்தபோது - அவரைத் தாக்கிவிட்டு, அந்த இருவரும் வீட்டினுள் நுழைந்தனர். அதேவேளை இன்னொரு வெள்ளை நிறக் காரில் வந்தவர்கள், மதிலுக்கு மேலாக ஏறிக்குதித்து வீட்டுக்குள் நுழைந்து, குறித்த யுவதியை - மதிலுக்கு மேலால் தூக்கி காருக்குள் போட்டுக்கொண்டு சென்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா - கொக்குவெளியில்

## திடீர் சுகவீனமுற்ற படையினரில் இருவர் ஆபத்தான நிலையில்!

(வவுனியா)

வவுனியா - கொக்குவெளி இராணுவ முகாமில் கடமையாற்றியபோது திடீரென இரத்த வாந்தி எடுத்து, வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட 18 இராணுவ கொமாண்டோக்களும் மேலதிக சிக்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் இருவரின் நிலை மிகவும் ஆபத்தாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இராணுவப் பயிற்சியின்போது மயக்கமுற்ற 18 இராணுவ கொமாண்டோக்கள் இரத்த வாந்தி எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்குப் பயிற்சி வழங்கிய இராணுவ அதிகாரியொருவர் தண்டனையாக பி-4 வெடிமருந்தை சுவாசிக்குமாறு அல்லது உண்ணுமாறு கட்டளை பிறப்பித்ததாகவும் - குறிப்பிட்ட சிப்பாய்கள் மறுத்த சமயம் கட்டாயப்படுத்தி திணித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்காரணமாக இரத்த வாந்தியெடுத்து மயக்கமடைந்த இராணுவச் சிப்பாய்கள், நேற்றுமுன்தினமிரவு வவுனியா வைத்திய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்பை உருவாக்க நோர்வே அரசாங்கம் தீவிர முயற்சி!

### கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு நாளையுடன் மூன்றாண்டுகள் நிறைவுபெறவுள்ள சூழலில் -**

**இரண்டு தரப்புக்களுக்கும் இடையில் சுனாமி அனர்த்த நிவாரண பொதுக் கட்டமைப்பை எப்படியாவது உருவாக்கிவிடவேண்டும் என்ற தீவிர முயற்சியில் நோர்வே அனுசரணையாளர்கள் ஈடுபட்டிருப்பதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.**

யுத்தநிறுத்தம் மூன்றாண்டுகளைப் பூர்த்தி செய்யும் நிலையில், சமாதான முயற்சிகளில் உருப்

தப்பட்டபோதும் எதுவுமே இறுதி இணக்கப்பாட்டை எட்டவில்லை.

மூன்று வருடங்களாக இழுபறி

வட்டாரங்கள் -

இதனால் எப்படியாவது சுனாமி அனர்த்த நிவாரண பொதுக் கட்ட

## சொல்ஹெய்ம் நாளை வன்னிக்கு விஜயம்!

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், நாளை வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஒருவாரகால விஜயத்தை மேற்கொண்டு, நேற்றிரவு வந்த சொல்ஹெய்ம், இன்று கொழுமபில் முக்கிய சந்திப்புக்களில் பங்கேற்கவுள்ளார்.

அரசாங்கத் தரப்பில் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் இவர், நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து - தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரமுகர்களுடன் கலந்துரையாடலை நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு நாளையுடன் மூன்றாண்டுகள் நிறைவுபெறவுள்ள சூழலில் -**

**இரண்டு தரப்புக்களுக்கும் இடையில் சுனாமி அனர்த்த நிவாரண பொதுக் கட்டமைப்பை எப்படியாவது உருவாக்கிவிடவேண்டும் என்ற தீவிர முயற்சியில் நோர்வே அனுசரணையாளர்கள் ஈடுபட்டிருப்பதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.**

யுத்தநிறுத்தம் மூன்றாண்டுகளைப் பூர்த்தி செய்யும் நிலையில், சமாதான முயற்சிகளில் உருப்படியான எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதுவரை பல்வேறு வழிமுறைகள் தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டபோதும் எதுவுமே இறுதி இணக்கப்பாட்டை எட்டவில்லை.

மூன்று வருடங்களாக இழுபறி நிலைப்படும் சமாதான முயற்சிகள் குறித்து - நோர்வே அரசு மிகவும் அதிருப்தி அடைந்திருப்பதாகவும் கூறும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் -

இதனால் எப்படியாவது சுனாமி அனர்த்த நிவாரண பொதுக் கட்டமைப்பையாவது உருவாக்குவதில் வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்புடன் நோர்வே அனுசரணையாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிக்கு விஜயம்!

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், நாளை வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஒருவாரகால விஜயத்தை மேற்கொண்டு, நேற்றிரவு வந்த சொல்ஹெய்ம், இன்று கொழுமபில் முக்கிய சந்திப்புக்களில் பங்கேற்கவுள்ளார்.

அரசாங்கத் தரப்பில் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் இவர், நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து - தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரமுகர்களுடன் கலந்துரையாடலை நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கந்த படுகொலைகளின் பின்னரான அரசியல் சூழ்நிலை, விடுதலைப் புலிகளின் ஐரோப்பியப் பயணம், சுனாமி நிதிப் பங்கீடு குறித்த பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுவினர் மீது வெலிக்கந்தவில் தாக்குதல்

## ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

(வாழைச்சேனை)

பொலனறுவ மாவட்டம் வெலிக்கந்தப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழு உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

வெலிக்கந்தவிலுள்ள கர்பொலவிலிருந்து முத்துக்கல நோக்கி செவனப்பிட்டிய வீதியால் ஆயுதக்குழு உறுப்பினர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது - நேற்றுப் பகல் 11.45 மணியளவில் இவர்கள் மீது பதுங்கியிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்குழு உறுப்பினர் மீது ஓட்டமாவடிப் பகுதியில் சூடு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஓட்டமாவடிப் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 10.15 மணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின்' அலுவலகமருகே ஆயுதபாணிகள் நடமாட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்துக்கு அருகில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு சந்தேகத்துக்கிடமான மூவர் ஆயுதங்களுடன் நடமாடியதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜோர்ஜ் புஷ் - கிளின்ரன் நேற்று கொழும்பு வருகை!





(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளான புஷ் (சீனியர்) மற்றும் கிளின்டன் ஆகியோர் நேற்று மாலை 4.12 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

யு.எஸ் 80002 என்ற விசேட விமானத்தில் வந்த இவர்களை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், வெளியுறவுபிரதி அமைச்சர் பேராசிரியர் விஷ்வ வர்ணபால, ஊடகத்துறை அமைச்சர் மங்களசமரவீர, உள்துறை அமைச்சு செயலர் திலக்ரணவிராஜா, மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றிலன் ஸ்ரீட் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் இவர்கள் இருவரும் விசேட அதிதிகளுக்கான புத்தகத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அனுமதியின்றி கட்டடம் அமைப்பவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## நல்லூர் பிரதேச சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென நல்லூர் பிரதேசசபை அறிவித்துள்ளது.

மேற்படி பகுதிகளில் கட்டடங்களை அமைப்பவர்கள் பிரதேச சபையின் அனுமதியையும், ஆலோசனையையும் பெற்று கட்டடங்களை அமைக்குமாறும், இந்தப் பகுதிகளில் அனுமதி பெறப்படாமல் பல கட்டடங்கள் கட்டப்படுவதாக சபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வீண் சிரமங்களும், தாமதங்களும் ஏற்படாமல் கட்டட பணியை மேற்கொள்ள கட்டடம் கட்டும் உரிமையாளர்கள் சபையின் சட்டமுன் அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனுமதியின்றி கட்டடம் அமைக்கும் உரிமையாளர்களையும் நீதிமன்றின் முன் நிறுத்தி, கட்டடங்களை அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நல்லூர் பிரதேசசபையினர் தெரிவிக்கின்றனர்.

### நோன்பு கால பூசை

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் அமைந்துள்ள 'ஈழத்துக் கல்வாரி' பீடங்களில், நோன்புகால திருச்சிலுவைப் பாதை தியானங்கள் தினமும் மாலை 5.30 மணிக்கு ஆரம்பித்து திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் நிறைவு பெற்று வருகிறது.

கடந்த 9 ஆம் திகதி விபூதிப் புதனன்று ஆரம்பமான தியான நிகழ்வுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 25 ஆம் திகதி பெரிய வெள்ளிக் கிழமைவரை "ஈழத்துக் கல்வாரி" யில் திருச்சிலுவைப் பாதை தியானங்கள் நடைபெற்று வருமென பங்குத் தந்தை ம.இ.பயஸ் அடிகளார் தெரிவித்தார். (206)

### இல்ல மெய்வல்லுனர் போட்டி

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கா.தருமரத்தினம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம் மற்றும் வலி.கிழக்கு அரசியற் துறைப் பொறுப்பாளர் சங்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

### காப்புறுதிக் கம்பனி நெல்லியடியில் திறப்பு

ஜனசக்தி காப்புறுதி கம்பனியின் கிளை அலுவலகம் இன்று நண்பகல் 12 மணிக்கு நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாவட்ட உதவி விற்பனை முகாமையாளர் ஜெய்ஸன் ஜெயகுலராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விற்பனை முகாமையாளர் ஸ்ரீ விஜயகாந் கலந்து கொள்ளவுள்ளார். (12)

### உணவு முத்திரை வழங்கப்பட்டுள்ளது

சுனாமியால் பாதிக்கப்பட்டு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு, இரண்டாம் கட்ட உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

நிவாரண முத்திரை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று பொது மண்டபங்கள் கரவெட்டியில் திறந்து வைப்பு!

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட துன்னாலை தெற்கு, இமையாணன் மேற்கு, உடுபபிட்டி தெற்கு ஆகிய பகுதிகளில் நியாப் திட்டத்தின்கீழ் மூன்று பொது மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

மேற்படி திறப்புவிழா வைபவம் கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நியாப் யாழ்.மாவட்ட பிரதி திட்டப்பணிப்பாளர் கே.பாலகிருஸ்ணர் மூன்று மண்டபங்களையும் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் உதவித் திட்டப் பணிப்பாளர் பி.நடராசா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், துன்னாலை தெற்கு பொது மண்டபத் திறப்பு விழாவின்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவனேசன், கஜேந்திரன் ஆகியோரும் விசேடமாகக் கலந்து கொண்டு தமது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

சுனாமி அனர்த்தம் காரணமாக பொது வைபவங்கள் யாவும் எளிமையான முறையில் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில், மேற்படி வைபவம் சிறிய அளவில் நடத்தி முடிக்கப்பட்டதென்பதைச் சுட்டிக் காட்டிய பிரதேசசெயலர், நியாப் திட்டத்தின் உதவிகள் மக்களுக்குப் பொருத்தமுற சென்றடைவதையிட்டு மகிழ்ச்சியையும் தெரிவித்து கொண்டார்.

# கீரிமலை நகுலேஸ்வரர் வருடாந்த மகோற்சவம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கீரிமலை ஸ்ரீநகுலாம்பிகை சமேதர நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஆரம்பமாகி அடுத்தமாதம் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனையுடன் கொடியேற்றம் ஆரம்பமாகும்.

மஹோற்சவ காலத்தில் விஷேட அபிஷேக ஆராதனையும், பூசைகளும் நடைபெறவுள்ளது.

மகா சிவராத்திரி தினமான எதிர்வரும் 8ஆம் திகதி நான்கு சாமமும் விசேட அபிஷேகமும் பூசைகளும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இந்து கலாசார அமைச்சின் யாழ்ப்பாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மஹோற்சவ காலத்தில் தினமும் மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை, கதாப்பிரசங்கம் போன்ற பல்வேறு பக்தி நிகழ்வுகளையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுப் பிரார்த்தனையில் மாணவர்களை இணைத்துக்கொள்ளவிரும்பும் பாடசாலைகளைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு ஆலயத்தின் பிரதமகுரு தெரிவித்தார்.

தீர்த்தக் கரையில் சுனாமி பேரனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களுக்கு விசேட ஆத்மசாந்திக் கிரியைகளும் நடைபெறவுள்ளது.

ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களின் வசதி கருதி, தினமும் காலை 9 மணிக்கு தெல்லிப்பளை இராணுவ சோதனைச் சாவடி ஊடான பஸ் சேவை இடம்பெறவுள்ளது.

சொந்த வாகனங்களில் செல்லும் பக்தர்கள் தெல்லிப்பளை, சேந்தாங்குளம் ஆகிய இரு பாதைகளின் ஊடாகவும் ஆலயத்திற்குச் செல்ல முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (101)

# தென்னிந்திய திருச்சபையின் ஏற்பாட்டில் குடத்தனையில் மாலைநேர வகுப்பு!

(யாழ்ப்பாணம்)

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையால் இலவச மாலை நேர வகுப்புக்களுடன், வாராந்த இலவச மருத்துவ முகாம்களும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருவதாக அருட் சகோதரர் ராஜன் றொகான் தெரிவித்தார்.

குடத்தனை, பொற்பதி, மணற்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தரம் 5 முதல் 11 வரையான மாணவர்களுக்கே இலவச மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி வகுப்பில் 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதேவேளை புனித நகர் கிராமத்தில் வாராந்தம் இலவச மருத்துவ சேவை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இங்குள்ள பாலர் பாடசாலை மாணவர்களின் போஷாக்கைக் கருத்திற்கொண்டு நாளாந்தம் பசுப்பால் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# சைவ பரிபாலனசபை நடத்திய பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்.சைவபரிபாலன சபை மாணவர்களிடையே நடத்திய பண்ணிசைப் போட்டியில் - வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

பண்ணிசைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு -

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் ஜெகதீஸ்வரன் மதூஷிகன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் நாராயணி சுதாகரன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாமிடம் யதுநந்தினி இராமநாதன் (இணுவில் இந்துக் கல்லூரி).

**மத்திய பிரிவு**

முதலாமிடம் மாதங்கி இராமநாதன் (இணுவில் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் ரவீந்திரன் அர்ஜுன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் நிவேதா கலியுகவரதன் (வட்டு.மத்திய கல்லூரி).


**மேற்பிரிவு**

முதலாமிடம் துளசி சிறிராசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

இரண்டாமிடம் விஜயருக்ஷாயினி சந்திரசேகரம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

மூன்றாமிடம் சர்மியா கிட்ணேஸ்வரன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)


நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
பரத், சந்தியா மற்றும் பலர் நடித்த
காதல் சில தினங்களுக்கு மட்டும். கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
ஜெயா ஆஸ், பிரமதி, நாசர், விஜயகுமார், இளவரசி நடித்த
குருதேவா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விரைவில் எதிர்பாருங்கள். எமது அடுத்த வெளியீடு

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த

சுக்ரன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

நிறைஞ்சனாஸ் சங்கானை
அப்பாஸ், சினேகா நடித்த
அது
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00


ராஜா யாழ்ப்பாணம்
அஜித் -திரிஷா நடித்த

ஜி
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல்
விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம்
Colonel Shankar Mega Gym.
Body Care & Fitness Centre
யாழ். சாலை, கிளிநொச்சி.
நேற்றுமுன்தினம் (19.02.2005) சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்ட மேற்படி நிலையத்தில் பயிற்சிபெற விரும்புபவர்கள் - பயிற்றுநர் திரு.வீ.தேவராஜாவுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவன அலுவலகத்தில் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.
"வலுவான உடலே, வாழ்வின் முதன்மையான சொத்து"
(A-3627)

அபிஷா தனியார் வைத்தியசாலை
தமிழ் மகாவித்தியாலயம் அருகாமை, வவுனியா.

நோயாளருக்கான சகல விதமான மருத்துவ பரிசோதனைகளையும் 21.01.2005 இல் திறக்கப்பட்ட புதிய நவீன கட்டடத்தொகுதியில் ஒருங்கமைத்து வழங்குகின்றது.
உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்

நிர்வாகம்
அபிஷா தனியார் வைத்தியசாலை,
வவுனியா.
தொ.பே: 024 222 1474
024 222 4574, 0777 237143
(C/3628)

# இந்திய சோதிடருக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

சோதிடம் கூறுவதாக பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இந்திய சோதிடர் கிஷோர் சாஸ்திரி என்பவரை மார்ச் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவர் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹொட்டலில் தங்கியிருந்து, பத்திரிகைகளில் விளம்பரம் செய்து சோதிடம் கூறிவந்தார். இவருக்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் இவரிடம் சோதிடம் கேட்க சாதாரண உடையில் சென்றிருந்தார். அப்போது அவர் அந்தப்பெண் பொலிஸ் கொன்ஸ்டபிளுடன் முறைகேடாக நடக்க முயன்ற வேளை, அந்தப் பெண் கொன்ஸ்டபிள் அங்கிருந்து வெளியே வந்து நடந்தவற்றைப் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து, இந்த இந்திய சோதிடர் கைது செய்யப்பட்டு, கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த சோதிடர் பூசை செய்வதற்கு 25 ஆயிரம் ரூபா வரை சிலரிடம் வாங்கியதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

# அம்பாறையில் சுனாமி அனர்த்தத்தில் 1,035 மீனவர்கள் பலியாகியுள்ளனர்

சுனாமி அனர்த்தத்தால் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் ஆயிரத்து 35 மீனவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்த அனர்த்தத்தால் ஆகக் கூடுதலான மீனவர்கள் இந்த மாவட்டத்திலேயே உயிரிழந்துள்ளனர் என அம்பாறை மாவட்ட கடற்தொழில் உதவிப் பணிப்பாளர் எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் கடற்தொழிலுக்கும், கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி - 500 கோடிக்கு மேல் என்றும், அவரது தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடற்தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைப் பொறுத்தவரை - 3 ஆயிரத்து 250 மீனவர்களின் வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இதற்குப் பதிலாக புதிய வீடுகள் அமைப்பதற்கு ஆயிரத்து 615 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. ஆயிரத்து 735 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன. இவறறைத் திருத்துவதற்கு 247 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

7ஆயிரத்து 501 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 35ஆயிரத்து 235 பேர் இடம்பெயர்ந்து - உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் மற்றும் நலன்புரி நிலையங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மீனவர்களின் படகு, தோணி உட்பட மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேதம், 130 கோடி ரூபா. மீனவர் நலன்புரி நிலையங்கள், மீனவ காரியாலயங்கள், மீனவர் தங்குமிடங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் 15 கோடி ரூபா என்ற விபரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

# உடும்பன்குள படுகொலை நினைவாகப் பேரணி!

உடும்பன் குளத்தில் சூடுமிதிப்பதில் ஈடுபட்டிருந்த தமிழர்கள் - விசேட அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதன் நினைவாக நேற்று முன்தினம் திருக்கோவில் பிரதேசத்தில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி இரவு, உடும்பன் குளத்தில் சூடுமிதித்துக் கொண்டிருந்த 135 தமிழர்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், அறுவர் தீயிட்டும் எரிக்கப்பட்டனர்.

இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்று 19 ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்றுமுன்தினம் திருக்கோவில் சந்தியில் இருந்து நாட்டுப்பற்றாளர் சதுக்கம்வரை பொது மக்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் ஒன்றிணைந்து நினைவு தின ஊர்வலமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

## லஞ்ச ஊழல் மற்றும் மோசடி

# விசாரணைக் குழுவை செயற்படுத்த அதிகாரிகளால் இயலாமலுள்ளது

(கொழும்பு)

லஞ்ச ஊழல் மோசடி விசாரணைக்குழு செயலற்று இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில்-அதனை மீண்டும் செயற்படுத்துவதற்கு அதிகாரிகளால் இயலாமல் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், லஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகள் 270 அளவில் கிடைத்தும், அவை தொடர்பான விசாரணைகளை நடத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் டிசம்பர் 15 ஆம் திகதியிலிருந்து லஞ்ச மற்றும் ஊழல் மோசடி விசாரணைக்குழு செயலற்றுப் போயிருந்தது. ஆனால் டிசம்பா 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுவுக்கு 50 முறைப்பாடுகள் கிடைத்தன. இதுவரை 270 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பாடசாலைகளில் பிள்ளைகளின் அனுமதியின் போதான முறைகேடுகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குத்கெதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு வகையான முறைப்பாடுகள் நாளாந்தம் கிடைப்பதாகவும், விரைவாக லஞ்ச ஊழல் விசாரணைக்குழு செயற்படாது போனால், மேலும் முறைப்பாடுகள் பெருமளவில் கிடைக்குமென ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லஞ்சஊழல் ஆணைக் குழுவை மீள இயக்குவதற்குத் தேவையான அங்கத்தவர்கள் மூவரது பெயரை அரசியலமைப்பு சபை மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பி, நீண்ட நாட்கள் கடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தெரிவு செய்த மூவர் மீதும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும். அவர்களுக்குப் பதிலாக வேறு அங்கத்தவர்களின் பெயர்களை சிபார்சு செய்ய இயலாமல் போனதாகவும் ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தே)

### சோதனைச்சாவடி மீது தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக்கொண்டான் இராணுவச் சோதனைச்சாவடி மீது நேற்றுமுன்தினம் இரவு கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (01)

### இல்ல மெய்வன்மை போட்டி

புத்தூர் - வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கா.தருமரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# இலங்கை போக்குவரத்துச்சபையை விரைவில் அமைக்க நடவடிக்கை

இலங்கை போக்குவரத்துச் சபையை விரைவில் அமைப்பது தொடர்பான சட்டமூல வரைபொன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கொத்தணி பஸ் கம்பனிகளின் 96 டிப்போக்களை இலங்கை போக்குவரத்துச் சபையாக மாற்றும் திருத்தச் சட்டம் அடுத்த மார்ச் மாதம் முதல் இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்க, போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக டிப்போ பேச்சாளர் கலாநிதி ஐ.எஸ்.ஜயரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாகப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவின் தலைமையில் போக்குவரத்து பிரதி அமைச்சர் லசந்த அகல்யவத்த, அமைச்சு செயலர் டி.எஸ். ஜயவீர, போக்குவரத்துச்சபைத் தலைவர் ஐ.எஸ்.ஜயரட்ண ஆகியோர் உட்படப் போக்குவரத்து அமைச்சினதும், இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் குழுவினரும் அடங்கிய குழுவின் மூலம் தற்போது ஆரம்பகட்டப் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக இ.போ.ச தலைவர் தெரிவித்தார். (தே)

# எஸ்.பியின் விடுதலை வேண்டி நல்லெண்ண பாதயாத்திரை!

நீதிமன்றத்துக்கு அபகீர்த்தி விளைவித்தார் என்ற குற்றச்சாட்டால் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் எஸ்.பி திஸநாயக்கவை - சிறையிலிருந்து விடுதலை செய்யக் கோரும் நல்லெண்ண நோக்கிலான பாதயாத்திரை மற்றும் சத்தியாக்கிரகம் என்பன கண்டியில் இன்று நடைபெறவுள்ளதாக மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் வசந்த அனுவிகாரவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி - தெகிவளை விளையாட்டு மைதானத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரையில் பங்கேற்கும் அனைவரும் எஸ்.பி திஸநாயக்கவின் படங்களையும், தாமரை மலர்களையும் கொண்டு செல்லவுள்ளனர்.

வி.எம். கோபல்லா வீதி மற்றும் ரயில் நிலைய வீதி ஆகிய சுற்றுவட்டம் பக்கமாக தலதா வீதி வழியாகப் பயணிக்கும் இந்தப் பாதயாத்திரை தலதா மாளிகைக்கு எதிராகவுள்ள மைதானத்தில் முடிவடைந்து, அங்கு சத்தியாக்கிரகம் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஆலயங்களில் பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

# தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

நாடெங்கிலுமுள்ள தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப - கல்வி அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்காக இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என கல்வி அமைச்சின் செயலர் தாரா டிமெல் அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு உட்பட 67 தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் அதேநேரம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 4 வாரகால பயிற்சியும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸாரின் சித்திரவதைக்குள்ளான மாணவன் இன்று வவுனியாவுக்கு!

(மன்னார்)

மன்னாரில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் பொலிஸாரால் பாலியல் பலாத்காரத்துக்குட்படுத்தப்பட்ட மாணவனை இன்று அனுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு அழைத்துச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வவுனியா நீதிமன்றத்தில் இடம் பெறவுள்ள அடையாள அணிவகுப்பில் பாலியல் பலாத்காரம் புரிந்த பொலிஸாரை அடையாளம் காட்டுவதற்காகவே இவர் வைத்தியசாலையிலிருந்து அழைத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இன்று மன்னாரில் மௌன எதிர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வை; மனித உரிமை அமைப்பு குற்றச்சாட்டு!

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கின்ற நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வை விதிக்கும் முறையானது பாரதூரமானது என ஆசிய மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் பசிஸ் பொர்ணான்டோ கருத்து தெரிவிக்கையில் -

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிவாரண உதவிகளுக்கு வரி விதிக்கப்படும் செயலானது - இலங்கை தொடர்பான நல்லெண்ணத்தைப் பாதிக்கக்கூடும். அத்துடன் இவ்வாறு வரி விதிக்கப்படும் செயலானது இந்த நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு கிடைத்த பின்னர் விற்பனை செய்யப்படுவதாகவே அர்த்தப்படும்.

இதனால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் உதவிகள் எதிர்காலத்தில் கிடைக்காமல் போகக்கூடும். எனவே இதனை ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து தடுக்கவேண்டும்.

இதேவேளை - சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரும் நிவாரணங்களுக்கு முதலில் அரசாங்கம் சுங்கத்தீர்வையை விதிக்கவில்லை எனினும், பின்னர் அது அவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் பால்மா தவிர்ந்த நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வையை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# ஒளிப்பட கையடக்க தொலைபேசிகள் கட்டுநாயக்காவில் தடுத்து வைப்பு

சட்டவிரோதமாக இலங்கைக்கு எடுத்துவர முயற்சிக்கப்பட்ட செய்மதி தொழில்நுட்பத்துடன் கூடிய ஒளிப்பட கையடக்கத் தொலைபேசிகள் சில கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலர் இவற்றினை எடுத்து வந்துள்ளனர். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ் (சீனியர்) பில்கிளின்ரன் ஆகியோரின் இலங்கைப் பயணம் தொடர்பான செய்திகளை வெளியிட இவற்றைக் கொண்டு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இது தொடர்பாக சுங்கத் திணைக்கள தலைவரிடம் வினவியபோது-இந்த வகையான தொலைபேசிகளை அனுமதியின்றி இலங்கைக்குள் எடுத்து வரமுடியாது எனத் தெரிவித்தார். (01)

# அரசியலுக்கான புதியபாதை கைநழுவிச் சென்றுள்ளதாம்!

## —ரணில் தெரிவிப்பு



சுனாமி பேரனர்த்தத்தின் பின்னர் நாட்டின் அரசியலைப் புதிய பாதையில் இட்டுச்செல்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் கைநழுவிச் சென்றுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். உடுகம்பரப் பகுதியில நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரபீடக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமி பேரனர்த்தத்தின் பின்னர் ஒருங்கிணைந்த அரசியலை நடத்தும் வாய்ப்பு ஜனாதிபதிக்கு இருந்தது. இதன்பின்னர் எல்லோரையும் இணைத்துக்கொண்டு சுனாமி அழிவிலிருந்து மீளுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியிருக்கலாம். மறுபுறம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கலாம், அரசியல் கட்சிகளை இணைத்திருக்கலாம், அரசசார்பற்ற அமைப்புக்களை ஒன்றிணைத்திருக்கலாம், அனைவரையும் ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த அரசியலை நடத்தியிருக்கலாம் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# இந்திய அணியுடனான போட்டிகளில் பங்கேற்கவுள்ள பாகிஸ்தான் வீரர்கள்!



(இஸ்லாமாபாத்)

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ள பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்சமாம் உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதி பாகிஸ்தான் வீரர்கள் இந்தியா வருவதாக முன்பு அறிவிக்கப்பட்டது. தற்போது பாகிஸ்தான் வீரர்களின் வருகை 4 நாட்கள் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்தியப் பயணத்துக்கான பாகிஸ்தான் வீரர்கள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டனர். 5 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் மூத்தவீரர் அர்ஷத் கான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் அக்தர் தோள்பட்டை காயம் காரணமாக அணியிலிருந்து விலகினார்.

இதற்கிடையில் சமி, முகமது கலீல் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் உடற்தகுதி பரிசோதனை நடத்தப்பட்டது. இந்தச் சோதனையில் அவர்கள் இருவரும் தேறியதால், அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

சமீபத்தில் நடந்த அவுஸ்ரேலிய பயணத்தின்போது தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாத காரணத்தால், தொடக்கவீரர் இம்ரான் பர்கத் அணியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக தௌபீக் உமர் வாய்ப்புப் பெற்றார். கடந்த ஆண்டு இந்திய அணி, பாகிஸ்தான் சென்றபோது தௌபீக் உமர் அணியில் இடம்பெற்றிருந்தார். ஆனால் அப்போது அவர் பெரியளவில் சாதிக்கவில்லை. இருந்தபோதும் அனுபவம் காரணமாக அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

அணி வீரர்களின் தெரிவு குறித்து கப்டன் இன்சமாம் உல் ஹக் நிருபர்களிடம் கூறுகையில் –

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள அணி இளமை மற்றும் அனுபவம் மிக்கது. எனவே இந்திய மண்ணில் முடிந்தவரை சவால்களைச் சந்திப்போம் என்றார்.

முன்னாள் கப்டன் இம்ரான் கான் கூறுகையில் –

இந்தியப் பயணத்தில் நிச்சயம் பாகிஸ்தான் அணிக்குச் சோதனை ஏற்படும். அக்தர் போன்ற வலுவான வீரர்கள் அணியில் இடம் பிடிக்காத நிலையில், இந்திய வீரர்கள் அனைவரையும் சுழற்பந்து வீச்சைப் பயன்படுத்தி ஆட்டமிழக்கச் செய்வது என்பது முடியாத காரியம். எனவே பாகிஸ்தான் அணி அதிகளவில் போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

நடந்துமுடிந்த அவுஸ்ரேலிய பயணம்வரை யுகானா பாகிஸ்தான் அணிக்கு துணைக் கப்டனாக இருந்தார். ஆனால் இந்தியப் பயணத்துக்கான பாகிஸ்தான் அணிக்கு யுனுஸ் கான் துணைக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்கால கப்டன் என்ற கணக்கில் யுனுஸ் கானுக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.



தெரிவு செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் வீரர்களின் விபரம் வருமாறு –

இன்சமாம் உல் ஹக் (கப்டன்), யுனுஸ்கான (துணைக் கப்டன்), யுகானா, ஷாகிட் அப்ரிடி, தௌபீக் உமர், யசீர் ஹமீட், சல்மான் பட், சொகைப் மலிக், ஆசிம் கமால், கம்ரன் அக்மல் (விக்கெட் காப்பாளர்), முகமட் சமி, ராணா நவீட் உல் ஹசன், டனேஷ் கனேரியா, அர்ஷத் கான், முகமது கலீல்.

## 2011 உலக கிண்ணத்தை நடத்த இந்தியா விருப்பம்

(புதுடெல்கி)

2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இந்தியாவில் நடத்துவது குறித்து, சர்வதேச கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்தார்.

ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மணியுடன் மத்திய விளையாட்டு அமைச்சர் சுனில் தத்தைச் சந்தித்தபின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு இந்தியாவில் சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தும் முதலிடத்தில்

(லண்டன்)

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகளின் தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அவுஸ்ரேலிய அணி 137 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முதலிடம் வகிக்கிறது.

நியூஸிலாந்து 120 புள்ளிகளுடன் 2ஆவது இடமும், இலங்கை 117 புள்ளிகளுடன் 3ஆவது இடமும், பாகிஸ்தான் 109 புள்ளிகளுடன் 4ஆவது இடமும், தென்னாபிரிக்கா 106 புள்ளிகளுடன் 5ஆவது இடமும், மேற்கிந்தியத் தீவுகள் 105 புள்ளிகளுடன் 6ஆவது இடமும் பெற்றுள்ளன.

இங்கிலாந்து 103 புள்ளிகளுடன் 7ஆவது இடமும், இந்தியா 98 புள்ளிகளுடன் 8ஆவது இடமும், சிம்பாப்வே 51 புள்ளிகளுடன் 9ஆவது இடமும், கென்யா 26 புள்ளிகளுடன் 10ஆவது இடத்தையும் வகிக்கின்றன. பங்களாதேஷ் 11 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் உள்ளது.

## விளையாட்டு

# மீண்டும் பயிற்சியில் சச்சின் டெண்டுல்கர்!



(மும்பை)

முழங்கைவலி காரணமாக அவதிப்பட்டு வரும் இந்திய கிரிக்கெட் நாயகன் சச்சின் டெண்டுல்கர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

முழங்கைவலி காரணமாக அவதிப்பட்டு வரும் இந்திய கிரிக்கெட் நாயகன் சச்சின் டெண்டுல்கர், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விளையாடுவது இன்னும் உறுதியாகவில்லை.

கடந்த சில வாரங்கள் முழு ஓய்வெடுத்த டெண்டுல்கர், கடந்த வெள்ளி முதல் முறையாக பயிற்சி செய்தார்.

தனது வீட்டின் அருகே உள்ள மைதானத்தில் சிலமணிநேரம் பயிற்சிசெய்த டெண்டுல்கர், பின்னர் உள்ளூர் அணி ஆடிய போட்டியை நேரில்சென்று பார்த்தார். இங்கிலாந்து ஏ பயிற்சியாளர் கிரகாம் கூச் கேட்டுக்கொண்டதற்கு இணங்க டெண்டுல்கர் இளம் வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காக மைதானம் சென்றார்.

இந்த நிலையில் நாளை ஹைதராபாத்தில் நடைபெறவுள்ள துலீப் தொடர் கிரிக்கெட் போட்டியில் டெண்டுல்கர் கலந்துகொள்வதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆனால் இன்னும் இந்தச் செய்தியை உறுதிப்படுத்தவில்லை. உடற்தகுதியை நிரூபிக்க டெண்டுல்கர் ஹைதராபாத் போட்டியில் நிச்சயம் கலந்துகொள்வார் என்று கூறப்பட்டுள்ளது.

# இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ள ஆட்டங்களின் விபரம்

எதிர்வரும் 28ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்து மூன்று டெஸ்ட் மற்றும் ஆறு ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ள பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டதையடுத்து போட்டி அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது.

இதன்படி பாகிஸ்தான் அணி இந்தியாவில் மோதவுள்ள ஆட்டங்களின் விபரம் –

மார்ச் 3-5 போர்ட் லெவன் அணியுடனான பயிற்சி ஆட்டம் (தர்மசாலா)

மார்ச் 8-12 முதல் டெஸ்ட் (மொஹாலி)

மார்ச் 16-20 இரண்டாவது டெஸ்ட் (கொல்கத்தா)

மார்ச் 24-28 மூன்றாவது டெஸ்ட் (பெங்களூர்)

மார்ச் 30 ஒருநாள் பயிற்சி ஆட்டம் (ஹைதராபாத்)

ஏப்ரல் 2 – முதல் ஒருநாள் போட்டி (கொச்சின்)

ஏப்ரல் 5- 2ஆவது ஒருநாள் போட்டி (விசாகப்பட்டினம்)

ஏப்ரல் 9- 3ஆவது ஒருநாள் போட்டி (ஜம்ஷெட்பூர்)

ஏப்ரல் 12- 4ஆவது ஒருநாள் போட்டி (அகமதாபாத்)

ஏப்ரல் 15- 5ஆவது ஒருநாள் போட்டி (கான்பூர்)

ஏப்ரல் 17-6ஆவது ஒருநாள் போட்டி (புதுடெல்கி)

# யாழ்ப்பாணக் கல்லூரி அணியை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் மகாஜனா அணி வென்றது!

(மல்லாகம்)

19 வயதுக்குட்பட்டோருக்கான பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் – யாழ்ப்பாணக் கல்லூரி அணியை ஆறு விக்கெட்டுக்களால் மகாஜனாக் கல்லூரி அணி தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. அந்த அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பெரியதம்பி 37, சசிதரன் 34, பிரியதர்ஷன் 27 ஆகியோர் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரி சார்பில் ரஜீபன் 4, எல்மோனீசன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 9 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரவிசாந் 1 சிக்ஸர், 17 பவுண்டரிகள் அடங்கலாக 113 ஓட்டங்களையும், தர்சன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக ஜெனார்த்தன் 4, தனகரன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் விளையாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பெரியதம்பி 23, தனகரன் 23, திருபரன் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரி சார்பாக தனஞ்சன் 4, ரஜீபன் 2, எல்மோனீசன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணியினர் வெற்றி இலக்கான 114 ஓட்டங்களை 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து பெற்றனர். இதில் ஆட்டமிழக்காமல் ஜெயப்பிரியன் 24 ஓட்டங்களையும், ரவிசாந் 23 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக சிவப்பிரகாசம் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனால் 6 விக்கெட்டுக்களால் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை, மகாஜனாக் கல்லூரி அணி வெற்றி கொண்டது. (72)

# உலக தரவரிசைப் பட்டியலில் 50ஆவது இடத்துக்கு வருவேன்!

## சானியா மிர்சா பேட்டி



(புதுடெல்கி)

இந்த ஆண்டு இறுதிக்குள் உலக தரவரிசையில் 50ஆவது இடத்துக்குள் முன்னேறுவேன் என்று இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த 18 வயதான சானியா அவுஸ்ரேலிய ஓபன் போட்டியில் 3ஆவது சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றதுடன், சமீபத்தில் நடந்த ஹைதராபாத் ஓபன் போட்டியில் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார்.

சானியா மிர்சா டெல்கியில் நிருபர்களிடம் கூறியதாவது –

உலகத் தரவரிசைப் பட்டியலில் இந்த ஆண்டு இறுதிக்குள் 50ஆவது இடத்தைப் பிடிக்கவேண்டும். அடுத்த கிராண்ட்ஸ்லாம் போட்டிக்குத் தகுதிபெறவேண்டுமென்பதே எனது குறிக்கோள். இதனை அடையமுடியும் என்று நினைக்கிறேன்.

கணுக்காலில் ஏற்பட்ட காயம் குணமடைந்து வருகிறது. ஹைதராபாத் ஓபன் போட்டிக்குப் பின்பு பயிற்சியில் ஈடுபடுவேன். எதிர்வரும் 28ஆம் திகதி தொடங்கும் துபாய் ஓபன் போட்டிக்கு முன்பு குணமடைந்து போட்டியில் பங்கேற்க முடியும் என்று நம்புகிறேன்.

எதிர்பார்ப்பு நிறைய இருக்கிறது. அதனை நிறைவேற்றும் விதத்தில் செயற்பட்டால்தான் உண்மையான வெற்றியை எட்டமுடியும். நான் ஒரு கிரிக்கெட் ரசிகை. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்க்கத் தவறமாட்டேன். டெண்டுல்கர் எனக்குப்பிடித்தமான வீரர் எனத் தெரிவித்தார்.

# பெண்கள் சுய ஆளுமையைப் பெறுவதாயின் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும்!

## யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கயல்விழி

பெண்களுடைய ஆளுமையை வெளிப்படுத்தும் நோக்கத்திலும், அவர்களின் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திலும் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெண்கள் என்றுமே மற்றவர்களை நம்பியிராமல் தமது காலில நின்று உழைத்து முன்னேறவேண்டும். இப்படி மாறுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கவேண்டும்.

இதற்காகவே எமது நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் இந்தப் பயிற்சி நெறியை இன்று ஆரம்பித்துவைக்கிறார் என, சங்கானை அரசினர் மட்கல இயந்திர நிலையத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட பெண்களுக்கான பயிற்சி நெறி கால்கோள் விழாவில் பங்குகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கயல்விழி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட தொழிற்துறைத் திணைக்கள அனுசரணையுடன், சங்கானை அரசினர் மட்கல இயந்திர நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்ட பயிற்சிநெறியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

எமது நாடாளுமன்ற உறுப்பினரின் கற்பனையில் சிந்தித்த விடயம் இன்று நனவாக்கப்படுகின்றது. இதன்மூலம் 25 பெண்கள் வரை இந்த மட்கல பயிற்சி நெறியை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டுவதோடு, இதன்மூலம் அவர்கள் தமது உழைப்பில் தம்மைத்தாமே உழைப்பாளிகளாக்கும் சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது.

இதனை முழு அளவில் செய்து முடிப்பதற்கு பயிற்சியாளர்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். இவர்களின் ஒத்துழைப்பின்றி நாம் இதன் இலக்கை அடைவது கஷ்டமான காரியமாகும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகவும், இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பித்துவைப்பதற்கு மூலகர்த்தாவாகவும் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தனது உரையில்-

பெண்கள் உழைப்பாளர்களாக மாறி தமது வீட்டுத் தேவைகளைத் தீர்க்கக்கூடியவர்களாக இருந்து வந்துள்ளனர். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அதற்கான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு வெகுவாகக் குறைந்துவிட்டன. பெண்கள் தலைமைதத்துவம் நிறைந்தவர்களாக மீண்டும் உருவாகவேண்டும். தமது சொந்தக் காலில் நின்று மீண்டும் உழைத்து முன்னேற்றம் காணவேண்டும்.

தென்னிலங்கையில் மட்கலப் பொருட்களின் விற்பனையையும், உலலாசப் பயணிகள் அவற்றை விரும்பி வாங்கும் தன்மையையும், மட்கலப் பொருட்களுக்கான ஏற்றுமதிச் சந்தை வாய்ப்பையும் பற்றி நேரடியாக அவதானித்தேன்.

ஏன் நாமும் எமது யாழ். மண்ணிலே இவற்றைச் செய்து குறிப்பாக பெண்களுக்கான சுய முயற்சியின்மூலம் இவற்றைச் செய்து ஒரு நல்ல நிலையை எட்டக்கூடாது எனச் சிந்தித்தேன். இதன்பொருட்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடியபோது அவர்களும் தமது ஒத்துழைப்பை நல்கினார்கள். பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின்மூலம் யாழ்.மாவட்டத்தில் ஐந்து கோட்டங்களில் ஐந்துவிதமான சிறுகைத்தொழில் முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி, வலிகாமம், தீவகம், வடமராட்சி கோட்டங்களில் முறையே - பற்றிக் வேலைப்பாடு, தும்புத் தொழில், மட்கலப் பொருட்கள், நெசவு, பனை சம்பந்தமான சுயதொழில்களை ஆரம்பிக்க முயற்சி எடுத்துள்ளோம். இந்த முயற்சியில் சங்கானையில் மட்கலப் பொருட்கள் செய்யும் பயிற்சியை இன்று ஆரம்பிக்கிறோம். காலப்போக்கில் மிகச் சிறந்த கைவினைக் கிராமங்களை இந்தக் கோட்டங்களில் உள்ள கிராமங்கள் அனைத்தும் மாறவேண்டும் எனத் தெரிவித்தார். (48)

# 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' 2 ஆவது தடவையாக மேடையேற்றம்

(சுதுமலை)

செயற்திறன் அரங்க இயக்கத்தின் 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடக ஆற்றுகை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.30, மாலை 3.30 மணிக் காட்சிகளாக யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் தே. தேவானந்தின் நெறியாள்கையில் இரண்டாவது தடவையாக 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' யாழ்.பல்கலைக்கழகத்தில் மேடையேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

# நலன்புரி நிலையங்களில் எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் வசிக்கும் மக்களிடையே எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை வடமராட்சியிலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளை மேற்கொண்டுவருகிறது.

அத்துடன் வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் உளநலத்தை மேம்பாடடையச் செய்யும் செயற்பாடுகளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சிக் கிளை மேற்கொண்டுள்ளது.

இதற்காக வடமராட்சி கரையோரப் பிரதேச பாடசாலைகளில் பாடசாலை முடிவுற்றதும் செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள் பாடசாலை மாணவர்களின் உள நலத்தை மேம்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் உட்பட பல செயற்பாடுகளைச் செய்துவருகின்றனர். (14)

# சாவகச்சேரி நகரசபை செயலாளர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளைப் போடுவதற்கு இடமில்லை. எனவே இந்தப்பகுதி மககள் அனைவரும் தங்கள் வசிப்பிடங்களில் அன்றாடம் சேரும் குப்பைகளை தங்கள் வசிப்பிடங்களிலுள்ள பயிர்களுக்கு பசளையாக்குமாறு சாவகச்சேரி நகரசபைச் செயலர் மக்களைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை அலுவலகம், சாவகச்சேரி மக்களுக்கு தெரிவித்துள்ளதாவது -

மக்கள் தமது வசிப்பிடங்களில் அன்றாடம் சேரும் குப்பைகளை பசளையாக்கும் நோக்குடன் ஒரு கூடமைத்து அதில் குப்பைகளைப் போட்டுக்கொள்ளவும். அத்துடன் வசிப்பிடக் கழிவுப் பொருடகளை வீடுகளுக்கு முன்பாக அல்லது வீதியோரங்களில் போடமுன்னர் நகரசபையின் அனுமதி பெறப்படவேண்டும்.

நகரசபைக்கு வாகன வசதி கிடைத்தவுடன், நகரத்தை அண்டியுள்ள பகுதிகளிலுள்ள குப்பைகளை அன்றாடம் அகற்ற வசதி செய்து கொடுக்கப்படும். குப்பைகளை வீதியோரங்களில் போடுவதால் பலவேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, இந்த நடைமுறைகளை அனுசரித்து நகரசபை நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (29)

# மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவால் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, குழுநடனம், குழுப்பாடல், சிறுவர்களுக்கான உடற்பயிற்சிகள் என்பன நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பங்குபற்றவுள்ள போட்டிகளின் விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளனர். விண்ணப்பதாரிகள் செயலாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தலைமை அலுவலகம், யாழ்ப்பாணத்துக்கு தமது உறுப்பினர்களை அனுப்புமாறு கேட்டுள்ளனர். (91)



பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் 2004 ஆம் ஆண்டுக்கான சகலதுறை விளையாட்டு விருது வழங்கும் நிகழ்வில் - சகலதுறை விளையாட்டு வீராங்கனை செல்வி தயாளினி செல்வராஜாவுக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தபேந்திரா ஜெயராஜா பதக்கம் சூட்டுவதைக் காணலாம். (14)



திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு அரங்கினூடாக ஆற்றுப்படுத்தல் நிகழ்வை நடத்திவருவதைக் காணலாம்.

# கீரிமலை நகுலேஸ்வரர் உற்சவத்துக்கு பக்தர்கள் செல்ல படைத்தரப்பு அனுமதி!

(தெல்லிப்பளை)

எதிர்வரும் 23 ஆம் திகதிமுதல் அடுத்த மாதம் 9 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத்துக்கு பக்தர்களை - தெல்லிப்பளை, சேந்தான்குளம் சோதனைச் சாவடிகளூடாக தினமும் சென்றுவர படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் தெல்லிப்பளை, சேந்தான்குள இராணுவ உயரதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், கிராம அலுவலர்கள், ப.நோ.கூ.சங்க தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருவிழாக்களில் தினமும் காலை 9 மணிமுதல் பக்தர்கள் சென்றுவர அனுமதிப்பது எனவும், தேர், தீர்த்தம் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆலயத்துக்குச் செல்வோரிடம் அடையாள அட்டைகளைப் பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தினமும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் - தெல்லிப்பளை, சேந்தான்குளம் சோதனைச் சாவடியிலிருந்து பக்தர்களை ஏற்றிச்செல்லும்.

அத்துடன் திருவிழா நாட்களில் மட்டும் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடம்வரை சென்று கடலில் பக்தர்கள் நீராடலாம் எனவும் அங்கு இணக்கம் காணப்பட்டது. (101)

### பயணிகள் கவனத்திற்கு

(தென்மராட்சி)

யாழ். கண்டி வீதியில் உள்ள நாவற்குழிப் பாலம் திருத்த வேலை காரணமாக பயணிகளின் நலன் கருதி இன்று திங்கட்கிழமை தொடக்கம் கோயிலாக்கண்டியில் இருந்து, நாவற்குழி பாலம் வரையும் - நாவற்குழிப் பாலத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையும் சிற்றூர்தி சேவை நடைபெறும் என்பதனை பயணிகளுக்கு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

அல்வாய் வேல்விந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இலட்ச அர்ச்சனை, மகா கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 24 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (116)

### மின் விளக்குகள் பொருத்தப்பட்டன

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சுண்டிக்குளி பகுதிக்கான பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டை வீதி என்பவற்றுக்கு தலா 10 இற்கு மேற்பட்ட மின்குமிழ்கள் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ளன.

மின் விளக்குகள் பொருத்தப்பட்டதைத் தொடர்ந்து இரவு வேளைகளில் இந்த வீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. (58)

### விசேட பிரார்த்தனை

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் ஆத்மாக்களின் ஈடேற்றத்திற்காக தெல்லிப்பளை பிரதேச செயலக ஊழியர்கள் தெய்வ ஆசிவேண்டி, துர்க்கை அம்மன் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை விசேட கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (101)

### தேவாரத்திரட்டு முற்றோதல்

(ஆவரங்கால்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைகள் பாராயணமும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் ஆவரங்கால் சிவன்கோயிலில் மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### முன்பள்ளிகளை மீள இயக்குமாறு கோரிக்கை

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த முன்பள்ளிகளைப் புனரமைத்து மீள இயக்கி சிறார்களின் கல்வித்தரத்தை மேம்பாடடையச் செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டைமானாறு முதல் கற்கோவளம் வரையான பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் சுமார் 25 முன்பள்ளிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் முன்பள்ளி ஆசிரியர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இதில் அக்கறை செலுத்தி முன்பள்ளிகளை மீள இயக்குவதற்கு உதவிபுரியவேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (14)



## கலாசரம்

# புன்னகை

யோ.கர்ணன்



தொடர் கதை

ஒளிவற்றிய ஒரு பின் மாலைப்பொழுதிலேயே அவளை முதன்முதலாகக் கண்ணுற்றான். பருவம் தப்பிப் பெருமழை பெய்த நாட்களிலொன்றாகவுமிருந்த நாளது. காவலரண் வரிசையைவிட்டு, மிகவும் பின்னாலிருந்த வீட்டுக் கிணறொன்றில் குளித்துவிட்டுத் தனியாக வந்துகொண்டிருக்கையிலேயே அவளைக் காணநேர்ந்தது. காவலரண் நிலைப் பகுதியிலிருந்து பின்னுக்கு வந்துகொண்டிருந்த ஐந்துபேர்கொண்ட அணியொன்றின் அங்கத்தவளாக அவளிருந்தாள்.

இடைவெளிவிட்டு, வரிசையாக வந்துகொண்டிருந்தவர்களில், முன்னால் வந்தவள் தலையை இலேசாக அசைத்துப் புன்னகையொன்றை வழங்கினாள். காற்றில் மிதந்துவந்த புன்னகையைப் பிடித்து, தன்னுடையதாக மாற்றி அவளுக்கு வழங்கினான். இரண்டாவது மற்றும் மூன்றாவதாக வந்த பெண்கள், கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது இறுக்கமான கட்டுப்பாடுகளையுடைய குடும்பங்களிலிருந்து வந்தவர்களாகவோ இருக்கவேண்டும். தலையைக் குனிந்தபடி மௌனமாகக் கடந்து போயினர். அவர்களது நடையில் நளினமான பெண்மைத்தனமிருந்தது. நான்காவதாக வந்தவள், தன் நடை தோரணை மூலம் தான் தான் அணித் தலைவி என்பதை எழுதி முகத்தில் ஒட்டியிருந்தாள். அசைய மறுக்கும் விழிகளுடன் பார்வை நேராக நிலைக்குத்தியவளாக நடந்துபோனாள். அவளது காய்ந்த உதடுகளில் புன்னகைகள் இறந்து போயிருந்தன/உள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்தன.

அவளைக் கடந்து இறுதியாக வந்தவளைப்பார்க்க, அதுவரை அவனைப் பார்த்துக்கொண்டு வந்தவள், அவன் பார்த்ததும் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் தலையைக் குனிந்ததற்கு முதல் கணத்தில், இதழ் பிரியாத அவளது உதடுகளைத் தாண்டிப் புன்னகையொன்று வெளியேறியது. அவள் எவ்வளவோ முயன்றும் அவளை மீறி அது வெளியே குதித்தது. தரையில் குதித்த பின்னும், தன்னுடைய புன்னகையை மீட்டு உதட்டுக்குள் அடைக்க முயன்றாள்.

அவன் அவளைத் தடுத்தான். ஒரு பாதிரியாரின் உபதேசத் தோரணையுடன் சொன்னான் -

“அவசரம் வேண்டாம் பெண்ணே... புன்னகைகள் கடவுளின் வரங்கள். அவை ஒருபோதும் உனக்குச் சொந்தமானவையல்ல. உன்னுள் நடனமாடித் திரியுமவைகள், நேசம் கிளர்கையில் எதிரில் வருபவருடன் ஒட்டிக்கொள்கின்றன. புன்னகைகள் தெய்வீகமானவை. தவிரவும், புன்னகைகள் வெளியேறுகையில் மலர் வாயிலாகயிருக்கும் உதடுகள், அவற்றை மீள உள்ளிளுக்கையில் கல்லறைகளாகி விடுவதை நீ அறிய மாட்டாயா?”

அவள் தலையைக் குனிந்தவாறு நின்றாள். தோளில் மாட்டியிருந்த துப்பாக்கியில் விரல்களால் தட்டி சப்தமெழுப்பிக்கொண்டிருந்தாள். பின், எதுவும் பேசாமல் தன் திசையில் நடக்கத் தொடங்கினாள். (நான்காவதாகப் போனவளின் கண்டிப்பான முகம் அவளின் நினைவில் வந்திருக்கலாம்) அவள் ஒரு புள்ளிக்குள் நுழைந்து, இல்லாமல் போகும்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு நடக்கத் தொடங்கினான். அவளது புன்னகையும் கூடவே போனது. நறுமணம் கமழும் அதனுடன் உதடசையாமல் கதைத்துக்கொண்டே போனான். பேச்சோடு பேச்சாக, புன்னகை ஒரு தகவலைத் தந்தது. சில காலமாகவே தான் வெளியே குதித்துவிடவே விரும்பியிருந்ததாகவும், ஆனால், அந்தப் பெண் அதற்கு அனுமதியளிக்கவில்லையெனவும், இப்போது தான் குதித்தபோது அவள் செயலற்றவளாகிவிட்டதாகவும் கூறியது. அத்துடன், அந்தச் சந்தர்ப்பத்தில் அவளால் ஏன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது?, என்ற தீராத சந்தேகம் தன்னிடம் வளர்ந்து விட்டதாகக் கூறியது. பிரபல மானுடவியல் ஆராய்ச்சியாளர்களின் நூல்களையும், ஆய்வுகளையும் படித்து அதற்கான பதிலைக் கண்டுபிடிக்க விரும்புவதாகவும் கூறியது. அத்துடன், புராதன ராஜா, ராணிகளின் அரண்மனைச் சம்பவங்களையும், வரலாறுகளையும் படித்தால், இதுபோல் அப்போதும் ஏதேனும் சம்பவங்கள் நிகழ்ந்தனவா என அறிய முடியுமென்றது. அனைத்தையும் ஆமோதித்தவன், தற்போது பரபரப்படைந்துவரும் மரபணு குறித்த ஆராய்ச்சி விடயத்தையும் சொன்னான். இதன்மூலம் அவளது மூதாதையர்களின் இயல்புகள், புன்னகைகள் பற்றி அறியலாமெனவும் சொன்னான். அதற்கு அயர்ச்சி மிகுந்தது. உலகம் விரைவாக நவீனமடைந்துவரும் ஒரு பொழுதில், இன்னமும் உணர்வு பூர்வமான ஒரு விடயமாயிருப்பது அதனை வருத்தமடையச் செய்திருக்கலாம்.

வழியில் எதிர்ப்பட்ட நண்பர்களையெல்லாம் அதற்கு அறிமுகம் செய்து வைத்தான். அனைவரும் குறும்புச் சிரிப்புடன் போனார்கள். காவலரணுக்குள் நுழைந்து உட்கார்ந்தபோது அருகிலேயே புன்னகையுமிருந்தது. நண்பர்கள் அது குறித்து விசாரித்தனர். அனைவரினதும் கேள்வியின் சாராம்சமும் ஒன்றாகவேயிருந்தது.

“அவன் எதற்காகப் புன்னகையைக் கூடவே அழைத்து வரவேண்டும்? வாங்கிய இடத்திலேயே அதனைத் தேவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டு வரவேண்டியதுதானே? அந்தப் புன்னகை ஏதேனும் விசேட அர்த்தங்களை உடையதா?”

ஒவ்வொருவருக்கும் பொறுமையாகப் பதிலளித்தான். அது கொண்டிருக்கும் விசேட அர்த்தங்கள் பற்றித் தானெதுவும் அறியவில்லையெனவும், புன்னகையே தன்னுடன் வரப் பிரியப்பட்டதாகவும் கூறினான்.

எப்போதும் அவனையொரு போட்டியாளனாகக் கருதும் மைக்கல், சிரித்தபடி வெளியே போனான். சற்று நேரத்திலெல்லாம் ஒரு புன்னகையை ஏந்தியபடி வந்தான். வெகு நாட்களாகவே தன்னிடமிருக்குமதை இரகசியமாகப் பேணி வருவதாகவும், இந்தப் புன்னகையைப் பரிசளித்தவள் தன்னுடைய புன்னகையையும் பேணி வைத்திருப்பதாகச் சொன்னான். இதைச் சொல்கையில் அவன் கண்கள் அளவுக்கதிகமாகப் பிரகாசித்தன. ஏனோ அந்தப் புன்னகையை அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அது அதிக உணர்சசி வசப்பட்டிருப்பதாக அவனுக்குப்பட்டது. உண்மையிலேயே அப்படித்தானிருந்ததா அல்லது இயல்பாகவே இருவருக்குமிருந்த போட்டி மனப்பாண்மையினால் அப்படித் தெரிந்ததா என்பது தெரியவில்லை. அனைவரும் பார்த்தபின் தன்னுடைய புன்னகையை எடுத்துக் கொண்டு மைக்கல் போனான். பழையபடி அதனை மறைத்து வைக்க மற்றையவர்கள் கூடியிருந்தும் கதைத்தனர்.

யாரையும் இலகுவில் உணர்ச்சி மயமாக்கிவிடவல்லதும், கடந்த காலத்தை நினைவூட்டிவிட வல்லதுமான மௌனமான இரவுப் பொழுது. நிலவிருந்தது, நட்சத்திரமிருந்தது. காதலிகளைப்போல எல்லோரையும் தழுவும் மிக மெல்லிய ஒளியிருந்தது, வானத்தில் கவர்ச்சிகரமான புதிர்த்தன்மையொன்று மிருந்தது. அந்தப் பொழுதில் அனைவரது மனங்களும் தானாகத் திறந்துகொண்டன. அனைவரிடமும் புன்னகைகள் பற்றிய கனவுகளிருந்தன. ஒரு அழியாத ஞாபகத்தைப்போல அந்தக் கனவைப் பேணுவதில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்கின்றனர் பலர், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் புன்னகைகள் வைத்திருந்தவர்களாகவேயிருந்தனர். (பின் ஏதோ ஒரு பொழுதில் தவற விட்டிருக்கலாம் அல்லது அவை தப்பியோடியிருக்கலாம்) உணர்ச்சி தோய்ந்த சொற்களால் வெகு நேரம் உரையாடிவிட்டுப் படுத்துக்கொண்டனர்.

அவன் காவல்க் கடமையிலிருந்தான். கூடவே புன்னகையுமிருந்தது. நிலவொளி பிரகாசமாகயிருந்தது. அந்த ஒளியில் புன்னகையுடன் ஆடிப்பாட விரும்பினான். ஆனால் ஆடமுடியாது. எப்படி ஆடுவது? எதிரே வன்மமொளிரும் ஒருசோடிக் கண்கள் துப்பாக்கிக் குறிகாட்டிகளினூடாக இவனையோ, புன்னகையையோ கண்டால் என்னாவது?

புன்னகை கடுமையான யோசனையில் ஆழ்ந்திருந்தது. காரணம் கேட்டான். உலகிலேயே மிகச்சிறந்த மானுடவியல் ஆராய்ச்சியாளர்கள் வாழ்ந்த காலமெதுவென யோசிப்பதாகக் கூறியது. அவனுக்கு அது பற்றியெல்லாம் தெரியாது. துப்பாக்கியைத் தூக்கி இலக்கின்றிக் குறிபார்த்தான். ஒரு முணுமுணுப்பான குரலில் புன்னகை கேட்டது -

“மனிதர்கள் தோன்றிய காலத்து அல்லது நாகரீகங்கள் செழித்த காலத்து அறிஞர்களாலேயே என் சந்தேகங்களைத் தீர்க்கமுடியுமென நம்புகிறேன். தயவுசெய்து அவர்களது இருப்பிடத்துக்கான வழியைச் சொல்லி உதவுவாயா?”

“அவர்கள் கடந்த காலத்தில் வாழ்பவர்கள். ஆகவே மேற்குத் திசையில் வேகமாகச் சென்றால் உன்னால் அவர்கள் இருப்பிடத்தை அறியமுடியும்.”

அது அப்போது புறப்பட்டுவிட்டது.

மறுநாளும், அதேநேரம் அவளை எதிர்பார்த்தவனாக வந்தான். அவளுக்குச் சொல்ல சில வேடிக்கையான கதைகள் அவனிடமிருந்தன. அவள் எதிர்ப்படவில்லை. அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்குப் போனான். அவனை அவள் உற்சாகமாக வரவேற்றாள். அவளது புன்னகைக்கு வந்த சந்தேகத்தையும், அதன் வேடிக்கையான செயலையும் சொன்னான். அவள் அடக்கமாட்டாதவளாகச் சிரித்தாள். திடீரெனச் சிரிப்பை நிறுத்திவிட்டு, தனக்கும் தீராத சந்தேகமொன்றிருப்பதாகவும், அதனைத் தீர்த்துவைக்கும் கடமை அவனுக்கிருப்பதாகவும் சொன்னாள். அவன் சம்மதித்தான்.

“அன்று என் புன்னகையை மீள அழைக்கமுயன்றபோது தடுத்ததன் நோக்கம் என்ன? புன்னகையைக் கூடவே அழைத்துச் சென்றதன் நோக்கம் என்ன?” உண்மையில், மிகச் சாதாரண கேள்வியாகப் பிறக்குத் தோற்றம் காட்டினாலும், சூட்சுமங்களால் உருவான கேள்வியதுவென அவன் புரிந்துகொண்டான். அவனிடம் பதிலிருக்கவில்லை.

“......................”

“என் புன்னகைகளை எப்போதும் பேணிக் காக்கத் தயாராக இருக்கின்றாயா? அவர்கள் இருவரின் நடுவிலும் மௌனம் மெதுவான வேகத்தில் நடனமாடியபடி நின்றது.

இப்போது அவன் புன்னகைகளின் தீவிர ரசிகனாக மாறியிருந்தான். ரசிகனாக மட்டுமல்லாமல், வெற்றிகரமான புன்னகை உற்பத்தியாளனாகவுமிருந்தான். வசீகரமும், அழைப்பும் மிகுந்த புன்னகையொன்று அவனிடமிருந்தது. இதயத்தின் இரகசிய பகுதியொன்றிலுள்ள அந்தரங்கமான உணர்ச்சியொன்றைக்கொண்டே அதனை உருவாக்கியிருந்தான். நடனமாடியபடி நிற்கும் மௌனத்தின் கால்களினிடையாகச் சென்று, சூட்சுமங்களால் ஆன எந்தக் கேள்வியையும் உடைக்கும் வல்லமை அதற்கிருப்பதாக நம்பினான். அந்தப் புன்னகை அவளுக்கானது. அவளுக்குப் பரிசளிக்கவே சில நாட்களாகப் பேணி வந்தான். அவளோ, அவளது அணியினரோதான் எதிர்ப்படவில்லை. அவனது பிரயாணங்களில் எதிர்ப்படும் தெரிந்தமுகங்களுக்கு உதட்டைச் சற்றே திறந்து, அதனை மெதுவாகக் காட்டுவான். அவர்கள் அதனைப் பிடுங்க முயல்வார்கள். அவன் மறைத்துக் கொள்வான்.

சித்திர மொழியிலான ப்ண்டைய கல்வெட்டொன்றிலும் புன்னகைகள் பற்றிய குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. அதில், உலகம் தொடங்கி சில நாட்களேயாகியிருந்த போது, பழத் தோட்டமொன்றில் தனிமையை அணிந்தவாறு அலைந்து திரிந்துகொண்டிருந்த யாருக்கும் பிறக்காத யுவனும், யுவதியும் பரிமாறிக்கொண்ட சாபங்களிலான புன்னகைகள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. ஆனாலும், எந்த மொழியாலான கல்வெட்டிலோ, அகராதியிலோ உயிரற்ற புன்னகைகள் பற்றிய குறிப்புக்கள் கிடையாது. புன்னகைகள் உயிருள்ளவை.

அவன் வசமிருந்த புன்னகை மெதுமெதுவாக வளரத் தொடங்கியது. உதடுகள் பிளந்தன. உதடுகள் தாண்டி புன்னகை நீண்டிருந்தது. யாரும் சுலபமாகத் திருடவல்ல நிலையிலிருந்தது. ஆனாலும் அந்தப் புன்னகையை உதிர்த்துவிட அவன் தயாரில்லை. எந்நேரமும் கைகளால் தன் வாயைப் பொத்திக்கொள்ளும் நிலைக்கு ஆளானான். அது வேடிக்கையான காட்சியாகயிருந்தது. அன்றைய கனவிலும், பழத்தோட்டத்தில் அலைந்து திரிந்த யுவதி வந்தாள். பின்னாளில், அவள் ஆடைகள் அணியக் கற்றுக்கொண்டதாகக் குறிப்புக்களிலிருந்தாலும், கனவில் ஏனோ நிர்வாணமாகவே வந்தாள். (தோற்றத்தின் மூலம் பிறரை இலகுவில் வசியப்படுத்தி விடவோ என்னவோ!) தான் பெற்ற சாபம் புன்னகையை இரு கரங்களிலும் ஏத்தியிருந்தாள். தன்னிடமிருக்கும் புன்னகையைப் பெற்று, அவனிடமிருப்பதைத் தந்துவிடும்படி கெஞ்சும் குரலில் கேட்டாள். கனவில் வந்த முதற்பெண் எவ்வளவு பேரழகியாக இருந்தாலும், அவனது புன்னகை யாருக்காக உருவானது? அவன் மறுத்துவிட்டான். அவள் எவ்வளவோ கேட்டும் கிடைக்காமல் போகவே, சாபப் பார்வை பார்த்துவிட்டு நிதானமாக நடந்துபோய்விட்டாள்.

இவன் கண் விழித்தபோது, விபரீதம் ஆரம்பமாகியிருந்தது. புன்னகை வளர்ந்திருந்தது மட்டுமல்லாமல், வாயைவிட்டு வெளியேறி உதட்டில் தொங்கிக்கொண்டிருந்தது. உதடு நீளமாக இழுபட்டிருந்தது. புன்னகையை உடனேயே உதிர்த்துவிட விரும்பி, அவளைத் தேடிப் புறப்பட்டான். அவர்கள் தங்கியிருந்த வீடு வெறுமையாயிருந்தது. அவர்கள் தங்கள் நடவடிக்கைக்குச் சென்றிருக்கலாமென நினைத்தவன், தகவல் கட்டுப்பாட்டு நிலையத்துக்குச் சென்றான். பிரதான தகவல் கட்டுப்பாட்டாளன் எதிரேயிருந்த மேசையில் தன் முகத்தைக் கழற்றிவைத்து கறுப்பு நிற மை பூசிக்கொண்டிருந்தான். மிகப் பெரிய சோகமொன்று வந்து நம்மைப் பீடிக்கப் போகின்றது. அதற்கான முன் ஆயத்தங்களில் தான் ஈடுபடுவதாகவும், தேவையாயின் அவனும் மையைப் பயன்படுத்தலாமென்றான். அவன் அதிசிரத்தையாயிருக்க, தன் மீதான நம்பகத்தன்மை உதிரக் கூடாதென்ற அவசரத்துடன் விடயத்தைச் சொன்னான். அவன் சொன்ன தகவலின் சுருக்கம் இதுதான் -

“அவர்களது தோழிகளான பெண்கள் ஐவரும் எதிரியின் பிரதேசத்தினுள் ஊடுருவியிருந்தார்கள். எப்படியோ அதனை அறிந்துகொண்ட எதிரி உசாரடைந்துகொண்டான். இவர்கள் மீள்வதற்கான பாதைகளை அடைத்துவிட்டு, எதிரி அவர்களைத் தேடித் தாக்க ஆரம்பித்திருக்கிறான்.”

அவன் எதுவும் பேசாமல் புறப்பட்டான். தனிமையானதும், ஆபத்தானதுமான பகுதிகளைக் கடந்துபோனான். (அது சற்று விதிமுறைகளை மீறுகின்ற செயல்தான்) எதிரியின் பிரதேசத்துக்குள் நுழைவதற்கு அவர்களது அணி பயணித்த பாதையின் ஓரமாக உட்கார்ந்தான். உதட்டில் தொங்கிய புன்னகையை உதிர்த்து தன் கைகளினுள் வைத்துக்கொண்டான். (அது சாபப் புன்னகையை ஏந்திய முதல் யுவதியை நினைவுபடுத்தியது) ஒரு முனிவனைப்போல தியானித்திருந்தான். நண்பர்கள் அவனைக் குழப்பவில்லை. மௌனமான நிலையில் அவன் யாருடனும் பேசிக்கொண்டிருக்கலாமென அவர்கள் எதிர்பார்த்தனர். அப்படியே சில நாட்களைக் கழித்தான்.

பின்னொரு நாளில், சருகுகள் நொருங்கும் சத்தம் காற்றைப் பிடித்து விழுங்க, அந்தப் பெண்கள் அணி தப்பித்து வந்தது. அவர்கள் வந்த காட்சி, அவர்களை முதன்முதலில் அவன் கண்ட நாளை நினைவுகூர்ந்தது. இரு சந்தர்ப்பங்களிலும் முதலாவதாக வந்தவளின் உருவம் ஒன்றாகவேயிருந்தது. அவளது தலையில் இரத்தக் காயமொன்றிருந்தது. அதற்குக் கட்டுப்போட்டிருந்தாள். இன்னொருத்தி கையில் கட்டுப்போட்டிருந்தாள். அனைவரும் மிக மிகச் சோர்வடைந்துபோய் வந்தனர். அவர்களின் முகங்கள் கலவரத்தையும், அதிர்ச்சியையும் தாங்கியிருந்தன. இவன் இரு கைகளினாலும் புன்னகையை ஏந்தியவாறு பரிசளிப்பதற்குப் போனான். ஒவ்வொருவராக நால்வரையும் கடந்தான். எப்போதும் அவள் வரும் ஐந்தாவது இடம் வெறுமையாகவே வந்துகொண்டிருந்தது. இறந்த உடலொன்றைப்போல சோகத்தையும், அமைதியையும் காவியபடி அந்த அணி அவளில்லாமல் நகர்ந்துகொண்டிருந்தது.


இரு கரங்களிலும் ஏந்திய புன்னகையுடன் உறைந்துபோய் வெகுநேரம் நின்றான். (அந்தக் காட்சி, அவன் கனவில் வந்த முதல் யுவதி இறைஞ்சி நின்றதற்கு ஒப்பாகயிருந்தது) நண்பனொருவன் தாங்கி அழைத்துப்போனான்.

அன்றிரவு விரைவாகவே உறங்கிப் போனான். இதற்காகவே காத்திருந்ததுபோல, அவள் கனவில்வந்தாள். தலையில் தோட்டா பாய்ந்து நேற்று இறந்துபோன நிலையிலேயே வந்தாள். கண்கள் மூடியிருந்த முகத்தில் இனம் புரியாத உணர்வொன்று பரந்திருந்தது. அவள் யாருக்கோ பரிசளிக்கவெனப் பேணி வந்த புன்னகையொன்றும், பிளந்திருந்த உதடுகளின் வழி தலைநீட்டியபடி இறந்து கிடந்தது.

## சீரியல் மயம்

பலமான விவாதம் அங்கே
அவளும் ஒரு பெண்ணா
எனக்கு ஏது புரியும்
என்னம்மா என்னாச்சு
கேட்டுற்றேன் நானும்
யாதொன்றுமல்ல அது
விளங்காத விடயம் இது
காவியாஞ்சலி பற்றியது என்றார்.

கல்யாணப் பேச்சு
ஆரம்பம் ஆச்சு
அம்மாவுக்கு அயல்வீட்டன்ரி
சும்மாவா மருமகள் சுப்பர்
என்றுரைக்க கேட்டு
மூச்சிரைக்க நானும் ஓடி
எங்கே அவள் எப்படி
என இது மருமகள் தொடர் என்றார்.



சித்திரை மாதம் ஒருநாள்
கட்டிலில் நானும் நித்திரை
வருகிற மாதம் எம் சித்தி
வருகிறவேளை கொண்டாட்டம்
அக்கா சொன்னது காதை தொட
துள்ளி எழுந்து அப்படியா
வினாவின எனக்கோ ஏமாற்றம்
காரணம் அது சித்தி சீரியல் அன்றோ.

நண்பன் ஒருவன் வீடு ஏகி
நானும் இருக்கையில்
அண்ணாமலை T.V இல் தொடங்க
நண்பன் அன்னை
சொன்னார் கதைச் சுருக்கம்
ஒரு கணம் முழித்தேன்
மறுகணம் அன்ரி போதும்
அடியேன் பார்ப்பதே இல்லை என்றேன்.

வாழ்க்கை அது அழகான
கோலங்கள் அன்றோ
நீ நான் அவள் அதில்
மூவிடம் என்றே இருக்க,
மெட்டிஒலி கேட்க மனங்கள்
இணைந்து மணம் காணுமன்றோ
நல் மனைவி அவள்
உடன் கூடியே வாழ்வாரெல்லோ.

சோ.ரஜீவ்

## நீயா அவள்?

ஈரமே இல்லாத கடலே!
அலைக் கரத்தால்
கோரப் பலியெடுத்துக் கொன்று புதைத்துவிட்டு
இன்று... வளமைபோல்
எழில் கொஞ்சுகின்றாய்.
உன்கரையில் நேரம் உலவுகின்றேன்!
நீதானா....
அன்று அரக்கியாகி ஆடியவள்? "தெய்வமென்று
எண்ணியமே" மோசம் செய்தவள்?
உன்மடிக்குள்
சிக்கிச் சிதறிச் சிதைமாகி... அழுகுருத்த
குக்கிராமம் முன்றாய்க் குடைசாய்ந்து கிடக்கிறது.
நக்கி நீ குடித்ததால்
என் நகரம் நரகமாச்சு.
எத்தனை பெரிய இராட்சத பலத்தை - நீ
[illegible]
[illegible]
கிணற்றினைக் கூட புரட்டிற்று உன் கைகள்!
[illegible]
[illegible]
[illegible]
நீண்ட கரை நெடுக
[illegible]
படர்ந்தனுன் வேலி!
[illegible]
[illegible]
[illegible]
ஆக்ரோஷம்
[illegible]
[illegible]
உன் நெஞ்சம்!
உன்னை உயிராய் நினைத்தவரை,
உன்னை வணங்கி உழைத்தவரை,
உன் மடியில...
தன்னை இரசித்துத் [illegible],
உன்னதத்தை
பெண்டாட்டி போலெண்ணிப்
பாசம் பொழிந்தவரை,
சுழற்றி இழுத்து [illegible] உன் வீரம்!
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உன் கரையில் நான் மட்டும்
தனித்து உலவுகின்றேன்.
[illegible]
அலைகள் எனை அழைக்க
[illegible] உனை இரசித்தேன்.
[illegible]
உன் மடியில
[illegible]
ஒரு நிமிடம் அஞ்சலித்தேன்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
போதும்...! [illegible]

த.ஜெயசீலன்

## நூல்அகம்




இதழின்தலைப்பு: தவிர
(கவிதைகளுக்கான .... இதழ்)
ஆசிரியர்: தானா விஷ்ணு

இந்த இதழில் கவிதைகளான 'மீளுயிர்ப்பு', 'பொய்', 'காலன்' 'விடியாத இரவும் கொடியது', 'தலை மீது விதியெழ எழுகிற ஓவியம்', 'ஞாபகத்தின் சுவடுகள்', 'தேர்வு' போன்ற தலைப்புகளில் அமைந்த கவிதைகளை யாத்திரீகன், செல்வமனோகரி, தா.இராமலிங்கம் – ஆத்மரிஷி, த.மலர்ச்செல்வன், நா.ஜனனி, ஜோனி மருதநாயகம் போன்றோர் எழுதியுள்ளார்கள். இதனுடன் எஸ். போஸின் கவிதையும் அடங்குகின்றன.

மேலும், 'அஸ்வகோஸ் கிளர்த்தும் உள்ளுணர்வு பற்றி' சசி எழுதிய கவிதை தேடும் பயணம் 01 'ஓரிடம்' கவிதைத் தொகுப்புக் குறித்து ஷார்ங்கின் ஒருபார்வையும், இரண்டு மொழி பெயர்ப்புக் கவிதைகளான 'நவீன க்யூப' கவிதையை தமிழில் ரெங்கராஜன் எழுத – 'பகிர்தல்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையினை தமிழில் நா.சத்திய பாலனும் எழுதியிருக்கின்றார்கள்.

நா. சத்தியபாலனுடைய நேர்காணலும்' மூன்று கவிதைத் தொகுப்பு வெளியீடுகளை அறிமுகம் செய்தும் தை மாசி மாதத்துக்கான 'தவிர' இதழ் வெளிவந்துள்ளது.

## போராட்ட வாழ்வில் இலக்கியம் உயிர் பெறுகிறது



இலக்கியங்கள் காலத்துக்கு காலம் வடிவம் ஒன்றானாலும் வேறுபட்ட கருத்துக்களில் அமைகின்றன. பலவிதமாக வரலாறு – பின்னணியில் போராட்ட வடிவமாகவும், வாழ்வோடு ஒட்டிய கருத்துக்கள் ஒன்றிப்போன வடிவமாகவும், எதிர்காலத்தில் படிப்பினையாகவும் அமைந்து விடுகின்றபோதுதான் இலக்கியம் உருப்பெறுகிறது, உயிர் பெறுகிறது.

சங்ககால இலக்கியங்கள் முதல் சமகால இலக்கியங்கள்வரை பாடமாக பல மாறுதல்களும், கற்பனை விடையங்களைத் தாண்டி உண்மைச் சம்பவங்களைத் தான் ஒட்டியதாக பொருள்பட வரிகள் அணிவகுத்து விளங்கிக்கொண்டு நகர்கிறது.

கவிதைகளில் – புதுக்கவிதை, மரபுக்கவிதை கைக்கூ கவிதை என விரிவடைந்து சென்றிருக்கின்றது போல், புதிய இலக்கியங்களும் பழைய இலக்கியங்களும் என பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், சமகால இலக்கியங்களின் மாறுபட்ட வரலாற்று உண்மைகளை போராட்ட வடிவில் கொண்டுவந்திருப்பது வியப்பாக இருக்கிறது.

ஒரு போராளி உருவாகி விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு வீரச்சாவு அடையும்போது, அதற்கிடையேயான அவர் செயற்பாடுகள் இலக்கியமாகும்போது – அதன் போராட்ட வடிவம் இலக்கியத்தில் உயிர் பெறுகிறபோது சமகாலத்து இலக்கியங்கள் பேசப்படுகிறது.

ஒரு நாட்டில் அடக்குமுறைகளுக்கு எதிராக விடுதலை வேண்டி போராடுகின்றபோது, அதில் ஏற்படும் மாற்றங்கள் தோல்வி அடைந்தாலும், வெற்றி அடைந்தாலும் பேசப்படுகின்றன.

இலக்கியங்கள் புதிய இலக்கிய வடிவங்களாக இதில் மட்டும் உயிர் பெறுகிறது.

பேச்சுமொழி – இடத்திற்கு இடம்மாறுபடும். எழுத்து நடை எழுத்தாளர்களுக்கிடையே மாறுபடும். ஒரு மொழியிலே பேச்சு மொழிகள் மாறுபடுகின்றபோது இலக்கியத்தின் எழுத்து நடையும் காலத்துக்கு காலம் மாறுபடுகின்றது.

16 வயது இளம் பெடியன் தனது மார்போடு வெடிகுண்டினை கட்டிக்கொண்டு கடலிலே பயணிக்கும் எதிரியின் பீரங்கிக் கப்பல் மீது வெடிக்கின்றபோதும், தரையிலே முகாமிட்டு மக்களுக்கு அநீதிகளை விளைவித்து வரும் எதிரியின் முகாம் மீதும் வெடிக்கின்றபோது பழைய இலக்கியங்கள் உயிர் அற்றுப்போகிறது.

போராட்ட காலத்தில் இலக்கியங்கள் பேசுகின்றவர்களுக்கு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கான சம காலத்து போராட்ட இலக்கியங்களை எழுதாமல், பழைய காலத்து இலக்கியங்களையே புதுப்பித்து; புதுப்பித்து எழுதிக் கொண்டிருப்பதால் சமகாலத்து இலக்கியங்கள் பதிவுசெய்யாமல் போய் விடுகிறபோது, இன்றைய காலத்து இலக்கியர்களும் காணாமற்போய்விடுகின்றனர்.

எமது போராட்ட இலக்கியங்கள், வரலாற்றில் உலக அரங்கில் புதுமைகண்டு என்றுமேயில்லாத போராட்ட வடிவங்களைக் கொடுத்து உலக போராட்டங்களுடன் ஒப்பிடமுடியாதளவில் வியர்ந்திருக்கின்ற, வளர்ச்சி கண்டிருக்கின்றபோது போராட்டத்தில் பங்குகொண்ட போராளிகளாலே இலக்கியங்கள் படைக்கப்படுகின்ற போது உயிர் உள்ளதாக என்றும் நடமாடும் இலக்கியங்கள் வாழும்.

– இலக்கியன் –

## தேடலும் பகிர்தலும்

## நெஞ்சு கனக்கும் நினைவுகள்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பன்னிருவரின் நாற்பது கவிதைகள் அடங்கிய தொகுப்பு நெஞ்சு கனக்கும் நினைவுகள். கவிஞர்களில் ஒருவராகிய இ.கோகுலனால் தொகுக்கப்பட்டு, தமிழ் மாணவர் ஒனறியத்தினரால் வெளியிடப்பட்டது. 'உள்ளிருப்பவை கவிதைகளல்ல, தூங்க மறுத்த நினைவுகளின் துளிர்கள' என்கிற அறிமுக வாசகத்திற்கு அத்தாட்சியாய் விளங்குவன அத்தனை கவிதைகளுமே.

ஸ்ரீ பகீரதன், க.சிவசங்கர், இ.சியாமினி, சி.கோகுலன், வ.பிரதீபன், இ.சிவதர்ஷினி, ச.கருணாகரன், சிவ.திவாகர், திருமலை விக்னா ராசு (சாமினி), செ.றொபின்சன், க.ஸ்ரீகாந் - ஆகிய பன்னிருவரே கவிஞர்கள். இந்தத் தொகுப்பில் கவிதைகளுக்களிக்கப்பட்ட இடம் போலவே ஓவியங்களுக்கும் இடம்கொடுக்கப்பட்டுள்ளமை இன்னொரு சிறப்பு. சி.கலைக்கதிர், அ.சஞ்ஜீத், பா.சாந்தன் ஆகிய இந்த மூன்று ஓவியர்களும் நுண்கலைப்பீட மாணவர்கள்.

வெளிப்பாடு - கவிதைகளின் மூலமாக இருந்தாலென்ன, ஓவியங்கள் வழியாக இருந்தாலென்ன, இரு முறைகளிலுமே இந்தப் படைப்பாளி இளைஞர்களின் உணர்ச்சி வேகமும், உள்ளக் குமுறல்களும் தெளிவாகத் தமமை இனங்காட்டிநிற்கின்றன. கவிதை வரிகள் வைரத் துகள்களாய் ஆங்காங்கு பளிச்சிடுவதற்கும் எடுத்துக்காட்டுகள் ஏராளமாகவே உள்ளன.

*'கடலோடு கடலாகவும், நெருப்போடு நெருப்பாகவும், ஓசையோடு ஓசையாகவும் கலந்து உடல் மறைந்தது'*
(யார் இவர்? ச.கருணாகரன்)

*'சோகத்திலுங்கூட நல்ல சுகமிருக்கிற தென்பதை சொல்லியிருக்கிறோம் - இதைப் புரிந்துகொள்வதும், தெரிந்துகொள்வதும் நீங்கள் தான் - இதில் புலப்படுத்துவதற்கு ஏதுமில்லை'*
(எங்கள் வாழ்க்கை - திருமலை விக்னா)

*'இருட்டில் நடக்கும் போது நானறிய நிழல் என்னுடன் வரும் சந்தோசமாவது மிஞ்சுகிறது என்னில்'*
(படிமங்கள் - சிவ.திவாகர்)

*'நான் கிட்டிப் புல்லு அடித்த நிலமும்*
*கிளித்தட்டு விளையாடிய புலமும்*
*இன்றுனது கிரிக்கெட் மைதானமா?'*
(பொங்கிய தமிழே, பொங்கியெழு - ச.கருணாகரன்)

*'கந்தகத்திலே மகரந்தங்களை உருவாக்கியவர்'*
*'துயிலும் இல்லங்களினருகில் எனக்கொரு சின்னக் குடில் வேண்டும்'*
(மாவீரரைப் பாடுவேன் - சிவ.திவாகர்)

ராசு (சாமினி)யின் கவிதைத் தலைப்புக்களும் கவித்துவம் வாய்ந்தவை

*'நானும் என் மூன்று காலங்களும்; மற்றும்,*
*1995 ஆம் ஆண்டில் என் தெருக்கள்' - என*

கவிதைகள் யாவுமே நெஞ்சு கனக்கும் நினைவுகளைக் கொண்டவை என்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை. எனினும், கோகுலனின் 'நாளைய நிகழ்வு' றொபின்சனின் 'அவன்', திருமலை விக்னாவின் 'பொங்கு தமிழ்' மற்றும் 'தீர்மானியுங்கள்' போன்றவை என்னைச் சற்று அதிகம் ஈர்த்தவை.

எந்தக் கலைப்படைப்பையும் 'உருவம் - உள்ளடக்கம்' என்று பிரிதது நோக்க இயலாதவாறு இரண்டும் ஒன்றுடனொன்றாய்ப் பின்னிப் பிணைந்து பேதங்களைந்து நிற்கையிலே அந்தக் கலைப்படைப்பு வெற்றி பெறும். எனினுங்கூட உள்ளடக்கத்தின் உண்மை, வீச்சு, வேகம் - என்பவையும் ஒரு படைப்பிற்கு உயிரூட்டிவிட இயலும். இதற்கு உதாரணமான கவிதைகள் பல தொகுப்பிலுள்ளன.

இன்னும் ஒரிரண்டு விடையங்களைக் குறிப்பிடுதல் பொருத்தம் - படி திருத்துதல், மொழிப் பயன்பாடு, ஓவியங்களின் தனிப்பாணி போன்றவை பற்றியும் கவனஞ் செலுத்தவேண்டிய கடப்பாடு இளங்கவிஞர்கள், கலைஞர்களுக்கு உண்டு. மேலும் தேர்ந்த வாசிப்பும், தீவிர எழுத்துப் பயிற்சியும் அவர்களின் ஆற்றல்களை மென்மேலும் மெருகிட்டு ஒளிரச் செய்யும் என்பதும் உண்மை.

சாந்தன்

## மன்னார் மாவட்டத்தில்

# தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தால் கணினிப் பயிற்சி நிலையம் திறப்பு!

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், படித்த இளைஞர்கள், யுவதிகள் நன்மை கருதி தகவல் தொழில்நுட்ப கணினிக் கற்கை நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு தகவல் தொழில்நுட்ப மன்னார் மாவட்ட இணைப்பாளர கி.பிரபா தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் தேசியக் கொடியை அடம்பன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் காஞ்சனன் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து கணினிப் பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கணினிக் கற்கை நிலையத்தை மடு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுதாஸ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் விஸ்வராஜா கணினியை இயக்கி, பயிற்சியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் தலைமையுரையைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் நிகழ்த்தினார். கெயர் நிறுவன உத்தியோகத்தர் கணேசலிங்கம், தமிழீழ மாணவர் அமைப்பின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் வேங்கை; ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**பெப்ரவரி 21**

1741: நேர்வரிசையில் விதைக்க உதவும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவரும், வேளான் விஞ்ஞானியுமான பிரிட்டனைச் சேர்ந்த ஜெத்ரோடுல் இன்று காலமானார்.

1851: திருடர்களோ அல்லது அந்நியர்களோ நுழைந்தால் மணி அடித்து எச்சரிக்கை செய்யும் "பார்க்ளாஸ் அலாரம்" என்னும் எச்சரிக்கை மணி மாஸாசூஸட்டில் பாஸ்டனில் அமைக்கப்பட்டது.

1866: முதல் பெண் பல் மருத்துவர் பல் மருத்துவத்துறையில் பட்டம் பெற்றநாள் இன்று. சின்சினாட்டி ஓஹியோ பல் மருத்துவக் கல்லூரியில், மிஸ் லூசி பி ஹாப்ஸ் என்ற பெண் பல் மருத்துவரே இன்று பட்டம் பெற்றவராவார்.

1878: முதன்முதல் தொலைபேசி விபரக்கொத்து இன்றுதான் வெளியிடப்பட்டது. "கனடிகெட்" என்ற இடத்தில் இது நிகழ்ந்தது.

1905: முக்டென் என்ற இடத்தில் ரஷ்யாவுக்கும் - ஜப்பானுக்கும் இடையே நடந்த போரில் இன்று ஜப்பான் - ரஷ்யாவைத் தோற்கடித்தது.

1916: 328000 ஜேர்மனியர்களையும், 348000 பிரான்ஸ்காரர்களையும் பலிகொண்ட முதலாவது உலக மகாயுத்தம் பிரான்சிலுள்ள வேர்டன் என்ற இடத்தில் வைத்து ஜேர்மனியர்களுக்கு எதிராக ஆரம்பமாகியது.

1922: பிரிட்டனிடம் இருந்து எகிப்து சுதந்திரம் பெற்ற நாள்.

1940: போலந்தில் "ஆஷ் விட்ஸ்" என்ற இடத்தில் யூதர்களுக்கான மரண முகாம் ஒன்றை ஜேர்மனி இன்று அமைக்க ஆரம்பித்தது.

1941: இன்சுலினை அதிகளவு உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வழிமுறைகளைக் கண்டுபிடித்த மூவருள் ஒருவரான கனடாவைச் சேர்ந்த பிரடெரிக் கிராண் டொண்டிங் விமான விபத்தில் பலியானார்.

1973: இஸ்ரேலிய போர் விமானங்களால் லிபியாவின் போயிங் 747 விமானம் சினாய் பாலை வனத்தில் பலவந்தமாக இறக்கப்பட்டது. இதில் 104 பேர் இறந்தனர்.

* கியூபா குடியரசு தினம்.

தொகுப்பு - சந்துரு

# அடம்பன் - பாப்பாமோட்டையில் வீரமுரசு அரங்க நிகழ்வு!

அடம்பன் - பாப்பாமோட்டை பிரதேசத்தில் அண்மையில் வீரமுரசு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த அரங்க நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஜெயசிங்கம், மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கைத்தமிழன், பாப்பாமோட்டை கிராம அபிவிருத்திச்சங்க அலுவலர் ஆகியோர் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கருத்துரைகளை வழங்கினர். தொடர்ந்து பாப்பாமோட்டை பாடசாலை மாணவர்களின் கவியரங்க நிகழ்வும் இடம்பெற்றது.

இதேவேளை பாப்பாமோட்டை பொது அமைப்புப் பிரதிநிதிகளுக்கான சந்திப்பு கடந்த புதன்கிழமை கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றது. இநதச் சந்திப்பில் இந்தக் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீரவு காண்பது குறித்துக் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், அவற்றை நிறைவேற்றுவது எனவும் முடிவுசெய்யப்பட்டது.

# உடல் வலுவூட்டல் நிலையம் கிளிநொச்சியில் திறப்பு!

மூத்த தளபதி கேணல் சங்கர் நினைவாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான வளாகத்தில் உடல் வலுவூட்டல் நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பாவும், மங்கள விளக்கை வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளரும் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்றி வைக்க, உடல் வலுவூட்டல் நிலையத்தின பெயர்ப் பலகையை விளையாட்டுத்துறை நிர்வாகப் பொறுப்பாளர் றூபன் திரைநீக்கம் செய்து வைத்தார். கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகன் உடல் வலுவூட்டல் நிலையத்தைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, மேலதிக அரச அதிபர் வேதநாயகன், பயிற்றுநர் குணரட்ணம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். ஆசிரியர் ஜீவராஜ் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.






மூத்த தளபதி கேணல் சங்கர் நினைவாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட உடல் வலுவூட்டல் நிலையத்தின் பெயர்ப்பலகையை விளையாட்டுத்துறை நிர்வாகப் பொறுப்பாளர் றூபன் திரை நீக்கம் செய்துவைப்பதையும், நிலையத்தை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன் நாடாவை வெட்டி திறந்துவைப்பதையும் படத்தில் காணலாம். (படங்கள்: கடம்பேஸ்)

# பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்ற நடவடிக்கை

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு முள்ளியவளை மகா வித்தியாலயத்திலும், இரணைப் பாலை மகா வித்தியாலயத்திலும் தங்கியுள்ள மக்களை இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட செயலணிக்குழுவினர் தெரிவித்தனர்.

இந்த இடைத்தங்கல் முகாம்களில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளனர். முள்ளியவளை மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள குடும்பங்கள் செல்வபுரம் இடைத்தங்கல் முகாம்களிலும், இரணைப்பாலை மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்கள் புதுமாத்தளன் இடைத்தங்கல் முகாமிலும் நாளையும், நாளை மறுதினமும் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மேலும், இந்த இடைத்தங்கல் முகாம்கள் காலநிலைக்கு ஏற்ற வகையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிடுகால் வேயப்பட்டு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வன்னிப் பதிவுகள்

### உழவு இயந்திரங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி - பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் இரண்டுசில்லு உழவு இயந்திரங்கள் இரண்டு வழங்கப்பட்டன.

இந்த இரு உழவு இயந்திரங்களும் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில வைத்து, பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் யோசப் பிரான்சிஸிடம் கையளிக்கப்பட்டது.

### மல்லாவியில் கலந்துரையாடல்

மல்லாவி பிரதேசத்தில் 2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு இடம் பெறும்.

மல்லாவி அரசியற்துறைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளன. இந்தக் கலந்துரையாடலில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் நலன் விருமபிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மல்லாவி பிரதேச அரசயல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கும் முழங்காவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

(கிளிநொச்சி)

முழங்காவில் அரசினா தமிழ்க் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். இந்தப் பாடசாலையில் கட்டடத்தினாலான வகுப்பறைகள் இரணடு உள்ளபோதும் அவை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. ஏனைய வகுப்பறைகள் கொட்டகைகளில் இயங்கி வருகின்றன.

இதைவிட தளபாடவசதி, ஆசிரியர் பற்றாக்குறை, நூலக வசதி, மலசலகூட வசதிகளற்ற நிலையில் இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றதால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# தகவல் தொழில்நுட்ப நிலையம் வவுனியாவில் திறந்துவைப்பு!

(வவுனியா)

சர்வோதய அமைப்பால் நாடு பூராகவும் ஏற்படுத்தப்படவுள்ள 12 தகவல் தொழில்நுட்ப நிலையங்களில், வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான முதலாவது தகவல் தொழில்நுட்ப நிலையம் இன்று காலை 10 மணிக்கு வவுனியா கண்டிவீதி மூன்றுமுறிப்பில் அமைந்துள்ள சர்வோதய மத்திய நிலையத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவல் தொழில்நுட்ப நிலையத்தை சர்வோதய அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி வின்னியா ஆரியரட்ண திறந்துவைக்கவுள்ளதாக வவுனியா மாவட்ட சர்வோதய இணைப்பாளர் கே.கனகரட்ணம் தெரிவித்தார்.

இங்கு கணினிப் பயிற்சி நெறி இலவசமாகவே வழங்கப்படும். அத்துடன் பொதுமக்கள், தொடர்பாடல் தகவல் பரிமாற்றங்களைப் பெறக்கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளன.

# ஓய்வுவிடுதி திறந்துவைப்பு

வவுனியா நகரசபை வளாகத்தில் அமைக்கப்பட்ட விளையாட்டு வீரர்களுக்குரிய ஓய்வு விடுதி நாளை மாலை 5 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் நிதியுத்வியுடன் அமைக்கப்பட்ட இந்த ஓய்வு விடுதியை, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் திறந்துவைக்கவுள்ளதாக, வவுனியா மாவட்ட அரச அதிபர் சண்முகம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்*
*செப்பமும் நாணும் ஒருங்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தள்ளாடும் நிலையில் புரிந்துணர்வு உடன்பாடு; சாத்தியமற்ற நிலையில் சமாதான நம்பிக்கை!

புரிந்துணர்வு உடன்பாடும், அதையடுத்து நிகழ்ந்த ஏ-9 பாதை திறப்பும், சமாதானம் குறித்த பரபரப்பான - புதிய நம்பிக்கைக்கான - சமிக்ஞையாயிற்று. இந்த உடன்பாட்டின் பின்னர் ஏற்பட்ட நகர்வுகள் சமாதானப் பேச்சுவார்த்தையை நோக்கியதாகவே இருந்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் கட்டம் கட்டமாக நடந்த பேச்சுவார்த்தைகளின்போது, அரசு அளித்த வாக்குறுதிகள் எதுவும் பேச்சளவில் மட்டும் இருந்ததேயன்றி, நடைமுறைப்படுத்தல் விடயத்தில் அரசு காட்டிய பின்வாங்கல் தன்மையும், காலம்கடத்தும் உத்திகளும் பேரினவாதத்தின் வாடையை அழுத்தமாகவே வீசச் செய்தது.

அதிகார பலமற்ற, தீர்மானமெடுக்கும் உரிமையற்ற பிரதமர் ரணிலின் பலவீனம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார வலுவின் முன்னே வெளிப்படையாகத் தெரிய - அன்றைய இரட்டை ஆட்சி நிலை, சமாதானம் குறித்த நம்பிக்கையை மெல்ல மெல்ல இழக்க வைத்தது.

பிரதமரின் சமாதான முயற்சிகளை - அதற்கான நோர்வேயின் அனுசரணையாளர் பணியை மூர்க்கத்தனமாக எதிர்த்த ஜனாதிபதியும், அவரது ஜே.வி.பி தோழர்களும் ரணிலை ஓரங்குலம் தானும் சமாதானப் பாதையில் முன்னேற அனுமதிப்பவர்களாக இல்லை.

இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான புலிகளின் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதையடுத்து, சட்டரீதியான அரசியல் சதி மூலம் தனது அதிகார வலுவைப் பயன்படுத்தி ரணில் அரசைக் கலைத்த ஜனாதிபதி சந்திரிகா, மீண்டும் தேர்தல் நடத்தி ஆட்சியைப் பிடித்த அன்றே சமாதானத்துக்கான சந்தர்ப்பம் நழுவிப்போகத் தொடங்கிவிட்டது. புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு சமாதான விரோத, போர் மோகம் கொண்ட அரசு என்பதை தனது ஒன்பது மாதகால ஆட்சியில் தெளிவாக உணர்த்திவிட்டுள்ள நிலையில் புரிந்துணர்வு உடன்பாடு மூன்று வயதை முடித்துள்ளது.

இந்த மூன்றாண்டு கால சமாதான சூழல் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுத்துவிடவில்லை. அவர்களின் எதிர்பார்ப்புக்கள் யாவும் சாத்தியமற்றதாகியுள்ள நிலையில், சர்வதேச சமூகத்தின் சமாதான முயற்சிகள் மீதும் நம்பிக்கையை இழந்து- பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட்டார்கள்...

புரிந்துணர்வு உடன்பாட்டை எல்லாவகையிலும் உதாசீனம் செய்யும் அரசும், அரசபடைகளும் தமிழ்மக்களை மட்டுமல்ல சர்வதேச சமூகத்தினரையும் கூட ஏமாளிகளாக்கவே முயன்றுவருகின்றனர்.

இந்த நிலையில் தொடர்ந்தும் புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்தஉடன்பாட்டைக் கடைப்பிடிப்பதா, அல்லது தங்களது உரிமைகளுக்காவும், தாயக விடுதலைக்காகவும் போராட்டத்தை மீள ஆரம்பிப்பதா என்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது உண்மையே.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரச தரப்பினருக்குமிடையே வரலாற்று முக்கியத்துவமிக்க புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு நாளையுடன் மூன்றாண்டுகள் நிறைவுறுகின்றது.

தமிழ்மக்களின் தாயக விடுதலைக்கான போராட்டம் பிரமிக்கத்தக்க மகத்தான வெற்றிகளைத் தொடர்ச்சியாகப் பெற்று, சிறிலங்கா அரசுக்கு மீளவே முடியாத பன்முகப்பட்ட பெருந்தோல்வியின் பாற்பட்ட நெருக்கடிகள் ஏற்பட்ட வேளையில், அப்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தேர்தல் ஒன்றிற்கு முகம் கொடுக்க வேண்டியிருந்த சூழலில், மீண்டும் சமாதானத்துக்கான வாய்ப்பொன்றினை சிங்கள ஆட்சியாளருக்கு வழங்கும் பெருந்தன்மையான நோக்குடன் விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச போர்நிறுத்தமே இன்றுவரை நிலவும் அமைதிச்சூழலுக்கு மூலகாரணியாகும்.

அந்தத் தேர்தலில் தென்பகுதி அரசியலின் பிரதான கட்சிகள் இரண்டும் சமாதானத்தையே தேர்தலுக்கான முக்கிய மையப்பொருளாக வைத்து பிரசாரத்தை மேற்கொண்டபோதிலும், ஏழாண்டு காலம் சமாதானத்திற்கான யுத்தம் என்று பிரகடனம் செய்து கொண்டு, போர்வெறியுடன் இயங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ.முன்னணி ஆட்சியை நிராகரித்த தென்பகுதி மக்கள், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி கையில் ஆட்சியை ஒப்படைத்தனர்.

விரும்பியோ, விரும்பாமலோ விடுதலைப் புலிகள் அறிவித்த போர்நிறுத்த அறிவிப்பை கெட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ரணிலின் தலைமையிலான அரசுக்கு ஏற்பட்டமைக்கு பல காரணங்கள் உண்டு.

- தொடர்ச்சியாக போர்முனையில் படைத்தரப்பு சந்தித்த தோல்விகள்...

- அதலபாதாளத்தை நோக்கிச் சரிந்துகொண்டிருந்த தேசத்தின் பொருளாதாரம்...

- போரின் அழுத்தங்கள் காரணமாக நாடளாவிய ரீதியில் மக்களுக்கு ஏற்பட்டிருந்த சலிப்பும், உளவியல் பாதிப்புக்களும்...

- ஆயிரக்கணக்கில் படையிலிருந்த படையினர் சொல்லிக் கொள்ளாமல் தப்பியோடியமை...

எல்லாவற்றிலும் மேலாக சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச அழுத்தம் போன்ற பலவும், ரணில் அரசை போர்நிறுத்த அறிவிப்பை தாமும் மேற்கொள்ள வைத்ததுடன், நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகளுக்கான அடுத்தகட்ட நகர்வையும் மேற்கொள்ள வைத்தது.

இந்த அடுத்தகட்ட நகர்வே புரிந்துணர்வு உடன்பாடொன்றை மேற்கொள்வதற்கான பாதையை வகுத்தது.


சமாதானம் என்று கூறிக்கொண்டே போருக்கான தயார்ப்படுத்தலை செய்யும் ஓர் அரசை நம்பி பேச்சுக்களை தொடர்வதில் ஏமாற்றமே மிஞ்சும் என்பது உறுதி.

இந்த அரசின் நிஜவடிவம் சுனாமியின் பின்னர் சர்வதேச சமூகத்துக்கு முழுமையாகத் தெரிந்துவிட்டுள்ள நிலையில், அவர்களுக்கே இந்த ஆட்சியினரை நம்புவது தொடர்பான சந்தேகங்கள் அதிகரித்துள்ளதை அண்மைக்கால சம்பவங்கள் பல உறுதி செய்துள்ள சூழலில், மூன்றாண்டுகால புரிந்துணர்வு உடன்பாடு தொடரக்கூடிய சாத்தியக்கூறுகள் அருகிக்கொண்டே போகிறது.

சந்தேகங்களுடன் - புரிந்துணர்வற்ற மறைமுக உள்நோக்கம் கொண்டவர்களுடன் சமாதானம் பேசுதல் சாத்தியமாகுமா?

சர்வதேச சமூகமே இதற்குப் பதில்சொல்லவேண்டிய பொறுப்புடையதாக இப்போது உள்ளது.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# 'அம்மா தாயே' சிறுவர்கள் அவர்கள் கண்களுக்குத் தெரியவராதோ?

மட்டக்களப்புக்குச் செல்வதற்காக வவுனியா தனியார் பஸ் நிலையத்தில் நின்ற - அக்கரைப்பற்று பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன். எத்தனை மணிக்குப் புறப்படுமோ? நடத்துநர் பஸ்ஸினுள் தென்படுகிறாரா? என்று திரும்பிப் பார்த்தேன். திரும்புவதற்குமுன், என்முகத்துக்கு முன்பாக தட்டச்சுப் பொறித்த கடிதம் ஆடியது. அதன் ஆட்டத்தைத் தடுத்தேன். அதன் வாசகம் கண்ணில் பட்டது.

இந்தக் கடிதம் கொண்டுவருபவர் மிகவும் கஷ்டநிலையில் இருக்கிறார். குடும்பத் தலைவன் தொழில் செய்ய முடியாதநிலையில் நோய்வாய்ப் பட்டிருக்கிறார். மாத்தளையிலிருந்த இவர்களது வீடு தீக்கிரையாகிவிட்டது. சாப்பாட்டுக்கே கஷ்டம். இந்தக் கடிதம் கொண்டுவரும் பெண்ணுக்கு ஐந்து குழந்தைகள்.....

கடிதத்தைப் படிப்பதை நிறுத்திவிட்டு அதை என் முகத்துக்கு நேரே நீட்டியாட்டிய கரத்தைப் பிடித்தேன். பிஞ்சுக் கரம், முகத்தைப் பார்த்தேன், உருவத்தைப் பார்த்தேன். தலை சரியாக வாரப்படாமல் அலங்கோலமாகக் கிடந்தது. அழகான நீண்டமூக்கு, நீண்ட கருவிழிகள், சிவந்தமுகம், வயது ஏழு அல்லது எட்டு இருக்கும்.

உனக்கு ஐந்து குழந்தைகளா? என்று கேட்டேன். இல்லை. உம்மாவுக்கு என்று சொல்லிவிட்டு, அடுத்த ஆசனத்தை நோக்கி நடந்தாள். பயணிகள் ஏறியிருந்த ஆசனங்களுக்குச் சென்று ஒரு பள்ளிவாசல் பெரியவர் இந்தக் குடும்பத்துக்கு உதவிசெய்யும்படி இரக்க சிந்தையுடன் எழுதிக்கொடுத்த உருக்கமான கடிதத்தைக் காண்பித்தாள். சரி யாரும் உதவியதாகத் தெரியவில்லை. இன்னும் நான் கைந்து வருடங்களின்பின் இந்தப் பெண் கைநீட்டினால் பலர் உதவக்கூடும். அப்படியொரு நிலை வரக்கூடாது என்றது எனது மனம். --

ஒரு சிறுவன் 10வயதிருக்கும் அரைக் காற்சட்டை அணிந்திருந்தான். இளமஞ்சள் சட்டை. கையில் ஒரு பொலித்தீன் பை. அவன் கைகளைப் பிடித்து ஒரு இளைஞன் - இதே வவுனியா தனியார் பஸ்நிலையத்திலி லுள்ள ஒரு தேனீர் கடைக்கு இழுத்துவந்தான். உனக்கு என்ன விருப்பமோ சாப்பிடு, தேனீர் குடி முடிந்ததும் என்னுடன் வா. பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுகிறேன். உனக்குச் சாப்பாடுதானே தேவை. இதற்காகத்தானே பிச்சை எடுக்கிறேன் என்று சொல்கிறாய்.

இல்லையண்ணை. எனக்கு ஒண்டும் வேண்டாம். என்னை விடுங்கோ. நான் வரமாட்டேன்.

சாப்பாடு தரலாம், உடுப்புத் தரலாம், பள்ளிக்கூடம் போ என்றான் இளைஞன். அதற்கு அப்பாவிடம் கேட்கவேணுமெண்டுசிறுவன் கூறினான். அப்பா இல்லையென்று பிச்சை கேட்டாய். பள்ளிக்குப் போ எண்டால் அப்பாவிடம் கேட்கவேணுமென்கிறாய் என்று இளைஞன் கேட்டான். இருவரும் சிறிதுநேரம் மல்லுக்கட்டினார்கள். இவங்கள் இப்படித்தான் திருத்தமுடியாது என்று தேனீர்க்கடை முதலாளி தீர்ப்புச்சொன்னார். பையன் தேனீர் குடித்து விட்டுச் சுதந்திரமாகச் சென்றான்.

இப்பொழுது பஸ்ஸினுள் பயணிகள் தொகை அதிகரித்தது. பதின்மூன்று பதினான்கு வயதுள்ள இரு சிறுவர்கள் கைகளில் பொலித்தீன் பைகளில் கட்டிய அப்பிள், தோடம்பழங்களுடன் ஏறினார்கள். ஒவ்வொரு பயணியின் முன்னேயும் நின்று நான்கு அப்பிள்கள் ஐம்பது ரூபாய், தோடம்பழம் ஐம்பது, இப்படி விலைசொல்லிக்கொண்டு நின்றனர். சில பயணிகள் பேரம்பேசி பழம் வாங்கினர். இவர்கள் பள்ளிக்கூடம் சென்று படிக்கவேண்டியவர்கள். குடும்பநிலைமை அவர்கள் பஸ்நிலையத்தில் பழம் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் உழைப்பில் தான் அவர்கள் வீட்டில் அடுப்பெரிய வேண்டும்.

இவர்கள் தவிரவேறு சிறுவர்களும் சுவரில் அலங்காரமாகத் தொங்கும் கலண்டர் போன்ற பாய்கள் விற்கிறார்கள். ஒலிப்பதிவு நாடாக்களும் விற்கின்றனர். இந்தச் சிறுவர்கள் திருட்டு, வழிப்பறி போன்ற தீய செயல்களில் ஈடுபடாமல் வியாபாரம் செய்வது நல்லதே!

ஆனால், இப்படி குடும்ப நிலைமை காரணமாக வீதி களிலும் வீடுகளிலும், பஸ்கள், ரயில்கள், கோயில்கள் ஆகிய பொதுஇடங்களிலும் தர்மம் கேட்கும் சிறுவர் சிறுமியர் இன்னும் எத்தனை பேரைப் பார்க்கிறோம். மோட்டார் வாகனங்கள் திருத்தும் கராஜ்கள், தேனீர்க் கடைகள், உணவு விடுதிகள் சில மதுபானச் சாலை களிலும்கூட, வீட்டில் அடுப்பெரிய வேண்டுமென்பதற்காக வேலை பார்க்கும் சிறுவர்கள் எத்தனைபேர்?

இந்தச் சிறுவர் சிறுமியர்கள் அமெரிக்காவிலிருந்து பூதக் கண்ணாடி வைத்து தமிழர் தாயகத்தைப் பார்க்கும் ஹியூமன் றைட் வோட்ச், ஐ.நா.வின் யுனிசெப் போன்ற அமைப்புக்களுக்கு மட்டும் எப்படித் தெரியாமல் போய்விடுகிறது. தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல. கொழும்பிலும் மற்றும் புறநகரிலும் எத்தனை சிறுவர் சிறுமியர் பொது இடங்களில் பிச்சை எடுக்கிறார்கள். எத்தனை வீடுகளில் அதிலும் உயர்ந்த பதவிகளில் உள்ளோர் வீடுகளில் வேலைக் காரர்களாக வேலை செய்கிறார்கள்? எத்தனை சிற்றுண்டிச் சாலைகளில், உணவுச் சாலைகளில் வேலைக்கமர்த்தப் பட்டிருக்கிறார்கள்? வேலைக்காரர் வீடுகளில் எஜமானிகளால் கொடுமைப் படுத்தப்பட்டபின்னர் தானே குட்டு வெளிப் படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி தமிழர் தாயகத்திலுள்ள தமிழ்ச் சிறுவர்கள், சிறுமிகள்மீது மிகக்கரிசனை செலுத்தி தலையங்கத்துக்கு மேல் தலையங்கம் எழுதும் கொழும்பு பத்திரிகையாளர்களின் கண்களுக்கும், காதுகளுக்கும்கூட பஸ் நிலையங்களில் அம்மா தாயே, ஐயா, பிரபுவே என்ற குரல்களின் ஒலியும் விழாது, உருவமும் தெரியாது. வவுனியா தனியார் பஸ் நிலையத்தில் ஒருமணிநேரம் நின்ற போது கண்டகாட்சிகளே நான் மேலே சொன்னவை. இன்னும் எத்தனை காட்சிகளோ!

## வாசகர் நோக்கு

### சட்டவிரோத மணல் அகழ்வு தொடரத்தான் வேண்டுமா?

கைதடி- நுணாவில் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதால், இந்தப் பகுதி குடிமனைகளுக்குள் கடல்நீர் உட்புகும் ஆபத்து உருவாகுமெனஇந்தப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். கைதடி நுணாவில் பூதவராயர் கோயிலுக்கும் குச்சப்பிட்டி மயானத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளிலேயே இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழப்படுகிறது.

உவர்நீர் தடுப்பணையின் பெரும் பகுதியிலும் கைதடி – நுணாவில் தரவைப் பகுதிகளிலும் மணல் அகழப்படுவதால், உவர்நீர் குடிமனைகளுக்குள் உட்புகும் அபாயம் உள்ளது.

அது மட்டுமன்றி அகழப்படும் மணல் உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிவரப்பட்டு பின்னர் கனரக வாகனங்களுக்கு மாற்றப்பட்டு கடத்தப்படுகிறது. இதன் காரணமாக இந்தப் பகுதி வீதிகளும் மோசமாக பாதிக்கப்படுகிறன.

இவைபற்றி உரிய தரப்பினர் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுப்பார்களா?

நாவற்குழி - கைதடி. சுந்தரி

பகுதி - 43 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ...! அலையே நீ எம் நிலை உணராயோ...!



அண்மையில் ஒரு கேஸ்வந்தது. கணவனை பிரம்பு வெட்டும் கத்தியால் ஒரு பெண் வெட்டியிருந்தார், மகனுக்கு கொட்டனால் அடித்த பெண் பின் தனது தலையை கொட்டனால் அடித்து உடைத்திருக்கிறார். கசிப்பும் இங்கு தாராளம். இவையெல்லாம் தமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப இந்த மக்களுக்கு தடையாகவுள்ளன. காவல்துறைப் பணிமனையும் சுனாமியால் சேதமாகிவிட்டது.

கல்வியைப் பற்றி நான் இங்கு குறிப்பிடக் காரணம் நாங்கள் இங்கு சுகாதார நடைமுறைகள் பற்றிச் சொன்ன போது சிரித்தார்கள். ஏனெனில் இவர்கள் அது பற்றி அறிந்திருக்கவில்லை. இவ்வாறான செய்திகள் இதுவரை அவர்களைச் சென்றடையவில்லை.

மகாவலி கங்கையில் காலைக் கழுவி விட்டு கையால் தண்ணீர் அள்ளிக் குடிப்பவர்களிடம் தண்ணீரைச் சுட வைத்துக் குடியுங்கள் என்று சொன்னால் 'இங்கபாருங்க இதத்தான் குடிக்கிறம் எங்களுக்கு வருத்தமா வருது?' என்று கேட்கிறார்கள்.

எனவே, இந்தப் பகுதி மக்களை பொருளாதார வாழ்நிலையில் உயர்த்துவது என்றாலும் சுகாதார நிலையில் மேம்படவைப்பதென்றாலும் கல்வியைப் பற்றிய விடயத்தில் நாம் கூடிய கவனம் எடுத்தேயாக வேண்டும்' என்று வற்புறுத்தினர்.

வாகரையில் நான் தங்கியிருந்த போது வெலிக்கந்தவில் சுட்டுக் கொல்லப்பட் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் அவரது சாரதி ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக 09.02.2005 அன்று பூரண ஹர்த்தால் இடம்பெற்றது. மறு நாள் ஒரு ஆர்ப்பாட்டப் பேரணியொன்றுக்கு இப்பகுதி மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இவ் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தமது கோரிகைகள் அடங்கிய மகஜர் ஒன்றை வாகரை பிரதேச செயலர் மூலமாக ஒப்படைப்பதாகவும் தீர்மானித்திருந்தனர். அதற்கான ஏற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கும் போது 10.02.2005 அன்று வாழைச்சேனையில் முஸ்லிம் மக்கள் ஹர்த்தால் செய்கிறார்கள் என்றும், ஒரு சைக்கிள் கூட அங்கு செல்லவில்லை என்றும் எனவே வாழைச்சேனையிலிருந்து பிரதேச செயலர் இங்கு வருவது சாத்தியமில்லை எனவும் அவர்களுக்குத் தெரியவந்தது. வாகரையில் தொலைத் தொடர்பு வசதிகளும் சிரமம். இந்நிலையில் மட்டு. எம்.பி ஜெயானந்தமூர்த்தி அவர்களுடன் தொடர்பு கொண்டு முஸ்லிம் மதத் தலைவர்களுடன் பேசி பிரதேச செயலர் அவர்களை வாகரைக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய முடியுமா? என வாகரைப் பிரதேசப் பொறுப்பாளர் காளி அவர்களைக் கேட்டார். அதற்கு அவர் இந்த விடயத்தில் முஸ்லிம் மக்களின் உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும் . கௌசல்யனின் மறைவுக்காகத் தானே ஹர்த்தால் செய்கி றார்கள். அதற்கு நாம் இடையூறு விளைவிக்கக் கூடாது வேண்டுமானால் நாளை (11.02.2005 வெள்ளி) நீங்கள் திட்டமிட்டவாறு உங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் எனக் கூறினார்.

இதற்கமைவாக அடுத்த நாள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது. கதிரவெளி, பால்சேனை போன்ற பகுதி மக்கள் - கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தின் முன்பாக இருந்தும், பனிச்சங்கேணி, ஊரியன்கட்டு மக்கள் - ஊரியன் கட்டிலிருந்தும், ஊர்வலமாக பிரதேச செயலகம் நோக்கிச் சென்றனர்.

"போராளிகளின் படுகொலைக்கு அரசே பொறுப்பு"

- தொடரும் -

வாரநோக்கு - யாழவன் -

# அரசின் உள்ளகமுரண்பாடுகளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளும்

அரசே நெருப்புடன் விளையாடாதே! எரிந்து போவாய்! உனது காடைத்தனத்தை கருக்கித்தள்ள எங்கள் கைகள் உயரும், அரசே




புலிகள் என்ன பெட்டிப்பாம்பா? சீறும் பாம்புகள். அரசே ஆயுதமற்ற போராளிகளை கொலை செய்யாதே! அரசே பதுங்கியிருத்தலும், கொலை செய்தலும் உனது பரம்பரைத் தொழிலா? இவை கடந்த வாரம் குடாநாட்டிலே நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளின் போது ஒலித்த மக்களுடைய குரல்கள்.

கடந்த 07ஆம் திகதி விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் சுட்டுக் கொல்லப்பட்ட அடாவடித்தனத்தையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்கள் மீது அரசு காட்டிவரும் பாராமுகத்தையும் கண்டித்து தொடச்சியான கண்டனப் பேரணிகளை சமூக அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன. இப் பேரணிகளின் முடிவிலே ஜனாதிபதி, போர் நிறுத்த கண்காணிப்பு குழு உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கு மகஜர்களும் தொடர்ச்சியாக கையளிக்கப்படுகின்றன. இது வழமையான விடயமாகி விட்டது.

அரசும் தொடர்ந்து தனது அக்கறையீனத்தை வடக்கு - கிழக்கு மீது காட்டியே வருகிறது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலக நாடுகளால் வழங்கப்பட்ட நிதி, பொருள் உதவிகள் கூட இதுவரை பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக சென்றடையவில்லை. அதிலும் வடக்கு - கிழக்கு குறிப்பாக விடுதலைப்புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் அதிகமாக அரசினால் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள்.

சுனாமி அனர்த்தம் நடைபெற்ற ஆரம்பம் முதலே தனது சுயலாப அரசியல் போக்கிலே இயங்க முனைந்து வரும் அரசு, இன்று வரையும் அதே போக்கையே கடைப்பிடித்து வருகிறது. வழித் தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிக்கும் கதையாக சுனாமி அனர்த்த பணிகளும் அமைச்சர்கள், அதிகாரிகளின் வீடுகளையே அதிகமாக சென்றடைகின்றன. இந்நிலையிலே தமிழர் தாயகப் பகுதிக்கென அனுப்பி வைக்கப்படும் உதவிகளை அரசினூடாகவே மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுவதும், சட்டங்களைப் போடுவதும் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கிறது.

பூனை நினைக்குமாம் தான் கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்தால் உலகமே கண்ணை மூடி விடுவதாக! இந்தக் கதை போன்றே அரசின் கதையுமுள்ளது. தான் தன்னிச்சையாக செய்யும் நடவடிக்கைகள் எதனையுமே உலகம் கண்டுகொள்ளவில்லையென்ற கருத்திலேயே அது செயற்பட்டு வருகிறது. ஆனால் சர்வதேச சமூகம் அத்தனை விடயங்களையும் எத்துணை அவதானமாக கண்காணித்து வருகிறது என்பதை அவ்வப்போது நடைபெறும் சில சம்பவங்களினூடாக அறிந்து கொள்ள முடிகிறது.

அண்மையில் நடைபெற்ற கிழக்கு படுகொலைகளை கண்டித்து - ஐ.நா செயலாளர் கொபி அனான் விடுத்த அனுதாப செய்தியும், விடுதலைப்புலிகள் அமைப்பை தமது நாட்டிலே தடைசெய்ய முடியாது என கனடா அரசு அறிவித்துள்ள முடிவும், இதனை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளன. ஆனால், அதிலும் கவலைக்குரிய விடயம் எதுவெனில் - ஐ.நா செயலாளர் விடுத்த அனுதாபச் செய்திக்கு அரசு கண்டனம் வெளியிட்டுள்ளமைதான். அரசின் இந்த கண்டம், அதன் அறியாமை, இயலாமைத்தனத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பினுடைய மக்கள் பணியை அவதானித்து அதனூடாக அடைந்த திருப்தியின் காரணமாகவே ஐ.நா செயலாளர் இந்த அனுதாபச் செய்தியை விடுத்திருந்தார். இது விடுதலைப்புலிகள் அமைப்புக்கு சர்வதேச ரீதியாகக் கிடைத்த வலுவான ஆதாரமாகும். இதனைப் பொறுக்கமாட்டாத அரசு, புலிகளை மீண்டும் மீண்டும் பயங்கரவாதிகள் எனப் பட்டியலிட்டுக் கூக்குரலிட்டு வருகிறது.

ஆனால், இன்றைய சூழ்நிலையிலே பயங்கரவாதத்தின் மொத்த வடிவமாக அரசு விளங்குகின்றது. முன்னாள் ஆயுதக்கும்பலான ஜே.வி.பியினரை இணைத்துக் கொண்டும் அவர்களது அடாவடித்தனங்களுக்கு வளைந்து கொடுத்துக்கொண்டும், சரியான, அமைதியான, வேலை நிறுத்தப் போராட்டங்கள் அற்ற ஒரு அரசை நடத்த முடியாமலும், வரவு - செலவுத் திட்டம் மூலமாக வழங்கப்பட்ட சம்பள உயர்வை அரச ஊழியர்களுக்கு வழங்க முடியாமலும் வங்குறோத்து அரசை நடத்திவரும் ஜனாதிபதியும், அவர் கட்சியினருமே இன்று மக்களுடைய பார்வையிலே பயங்கரவாதிகளாகவும், பேரினவாதிகளாகவும் தெரிகின்றனர்.

கடல் அனர்த்தம் காரணமாகக் கையில் எதுவுமே இல்லாது எல்லாமே கடல் அடித்துக்கொண்டு போய்விட கவலை தோய்ந்து நிற்கும் மக்கள், தமது பொருளாதார மறு சீரமைப்புக்கான அரசினுடைய உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்க, அரசோ சிறியளவிலான உதவிகளைப் பேருக்குச் செய்து விட்டு பேசாமல் இருக்கிறது. இந்த நிலையிலே பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று கேட்டால் நிச்சயமாக அரசைப் பயங்கரவாதிகள் என்றே பட்டியலிடுவார்கள்.

ஆனால், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியிலே அதிலும், குறிப்பாக விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதிகளிலே நடைபெற்ற புனரமைப்புப் பணிகளினால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பயன் கண்டுவருகிறார்கள். சரியானதொரு நிர்வாகக் கட்டமைப்பும், ஆளுமைத் தன்மையும் கொண்ட அமைப்பாக விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருகின்றமையால் புனரமைப்புப் பணிகளை மிக விரைவாக மேற்கொள்ள முடிகிறது. இதனால் சர்வதேச நிறுவனங்களும், தொண்டு அமைப்புக்களும் தமது உதவிகளை மனமுவந்து தாராளமாகச் செய்து வருகின்றன. பொது மக்கள் கடலிலே இறங்கி தொழில் செய்யக்கூடிய விதத்திலான உதவிகளும் ஓரளவு வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பெற்றுக் கொண்ட மக்களின் பார்வையிலே விடுதலைப்புலிகள் அவர்களின் ரட்சகர்களாகவே தெரிவார்கள். இங்கு பணியாற்றும் சர்வதேச அமைப்புக்கள் பார்வையில் தானும் பயங்கரவாதிகளாகத் தெரிவார்களா?

பயங்கரவாதிகள் எனும் பழைய பொய்ப்பிரசாரத்துக்கு புதிய வர்ணத்தைப்பூச அரசு எடுத்துவரும் முயற்சிகள் தற்போதைய சூழலிலே அரச பயங்கரவாதத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இலங்கையில் ஆட்சியிலேயுள்ள இனவாத அரசினுடைய சுயரூபத்தை சர்வதேசம் இன்று நன்றாகப் புரிந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளது. இது இயற்கை அழிவு தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திச் சென்ற நன்மையாகும்.

போராளிகளினுடைய கொலையை கண்டித்த உலகத் தலைவர் ஒருவர் விடுத்த அனுதாபச் செய்தியை கண்டித்தது எவ்வளவு அசிங்கத்தனமானது என்பதைக்கூட சிறிதும் சிந்தித்துப் பார்க்காது அரசு விடுக்கும் கண்டனமானது எவ்வளவு வேடிக்கையானது. இது ஐ.நா செயலாளரை அவமதிக்கும் செயலேயோகும்.

மறுபுறமாகப் பார்த்தால் அரசு விடுக்கும் கண்டனத்தின் மூலமாக ஐ.நா. செயலாளர் விடுத்த செய்தி இல்லாமற் போய்விடப்போவதில்லை. மீண்டும் மீண்டும் தவறு இழைக்கும் இலங்கை அரசினுடைய இனவாத மூடியை உலக அரங்கிலே அம்பலப்படுத்துவதாகவே அமையும். இதனையுணராது அரசு எடுக்கும் நகர்வுகள் உதவிப் பணிகளையும், பாதிககப்பட்ட இலங்கை மீதான அனுதாபத்தையும் குறைப்பதற்காகக் கூட அமைந்து விடலாம்.

இந்த நிலையில் அரசினுடைய உட்கட்சி முறுகல் நிலையும் உச்சக் கட்டத்தை அடைந்து வருகின்றது. ஜே.வி.பி - சுதந்திரக் கட்சிக்கு இடையேயான முறுகல் தீராதவியாதியாக தொடர்ந்த வண்ணமுள்ளது. ஆனால், மங்கள சமரவீர இந்தக் கூட்டு என்றுமே உடையாது என கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால் பொருந்தாத திருமணமாக உள்ள இந்தக் கூட்டு இன்றுவரை நீடிப்பதே அதிசயமான விடயமாகும். அதனை பூசிமெழுகி மறைக்க மங்கள சமரவீர, அனுரா போன்ற சில சுதந்திரக் கட்சி தலைவர்கள் படாதபாடு படுகின்றனர். இதனால் ஜனாதிபதிக்கும் சற்று கடுப்பேறியுள்ளது.

இதனடிப்படையிலே மங்கள சமரவீரவிடமிருந்து ஊடகத் துறை அமைச்சை பிடுங்கிக் கொண்டு அவரது வாய்க்கு சற்று பூட்டுப் போட்டுள்ளார். அது போன்றே தம்பி அனுராவின் அமெரிக்க பயணம் தொடர்பாகவும் விளக்கம் கேட்டுள்ளார். இது இவர்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை. ஆனால், அனுராவைப் பொறுத்த வரையிலே இந்த மிரட்டல் சாதாரணமானதாக இருக்கலாம். ஏனெனில், தாம் முற்றுமுழுதாகவே ஜே.வி.பியுடன் இணைந்து கொள்ளக் கூடியதற்கான தகுதியும் விருப்பமும் உடையவர் அத்துடன் கட்சிதாவல் என்பதும் அவருக்கு புதிய விடயமல்ல. எனவே, ஜனாதிபதியின் மிரட்டலும், பதவி குறைப்புக்களும் இன்னும் முறுகல் நிலையையே அவர்களிடையே அதிகரிக்கச் செய்யும் என்பதே உண்மையாகும்.

## தவக்கால நற்சிந்தனை

"பிறர் குற்றவாளி எனத் தீர்ப்பிடாதீர்கள்" (லூக். 6:37)



பிறர் குற்றவாளி என்று குறைசொல்லி, குற்றம் சாட்டுவது நம்மிலே அநேகரிடம் உண்டு. வாடிக்கையானதும் கூட. ஆனால் குறைசொல்லிக் குற்றம் சாட்டுவது சாத்தானின் குணம். ''ஒருவரையும் தீர்ப்பிட வேண்டாம்'' என்ற வசனத்தை அறிந்திருக்கிறோம். அநேகம் முறை கேட்டிருக்கிறோம். ஆனாலும் எவ்வளவு சீக்கிரத்தில் பிறரைத் தீர்ப்பிட்டுப்பேசி விடுகிறோம். பெற்றோரும் பிள்ளைகளும், கணவனும் மனைவியும் முதலாளியும், தொழிலாளியும் ஒருவ ரை ஒருவர் மாறி மாறி தீர்ப்பிட்டுக் கொண்டே இருப்பதைக் காண்கிறோம். இந்தத் தீர்ப்பளிக்கும் எலும்பில்லாத நாவை நாம், மறுரூபமாக்கவேண்டும். இதற்கு வெறும் நாவை மட்டுமே மாற்றிப்பயனில்லை. நம் உள்ளமும் மாற்றம் அடைய வேண்டும். ஏனெனில் உள்ளத்தின் நிறைவால் வாய் பேசும் என்று யேசுவே கூறியுள்ளார். ஆகவே நம் உள்ளங்கள் மாற்றம் அடைய வேண்டும். இதற்காக இத் தவக்காலத்தை உகந்த முறையில் செலவிடுவோம்.

- மோ. தார்சீசியஸ் -

# ஈரானின் அணு உலைக்கு ரஷ்யா ஆதரவு வழங்கும்!

## அதிபர் புடின் தெரிவிப்பு




(மொஸ்கோ)

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வரும் நிலையில், ஈரானுக்கு ஆதரவாக ரஷ்யா குரல் கொடுத்துள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும், அதைக் கைவிடவேண்டும் என்றும் அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. இதற்காக ஐரோப்பிய நாடுகளைத் தன் அணியில் திரட்டி, ஈரானை வற்புறுத்தும்படி அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

ஆயுதம் தயாரிப்பதற்காக அணு சக்தியைப் பயன்படுத்தவில்லை; ஆக்க பூர்வ பணிகளுக்குத்தான் பயன்படுத்துகிறோம் என்று ஈரான் கூறிவருகின்ற போதிலும், அமெரிக்கா அதனை நம்பத் தயாராக இல்லை.



இந்த நிலையில், ஈரான் மீது போர் தொடுக்க மாட்டோம் என்று சொல்ல முடியாது. ஆனால், பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காண விரும்புகிறோம் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

அவர் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் -

இராணுவ நடவடிக்கையும் எங்கள் முன்னுள்ளது. ஆனால், அது முதல் வாய்ப்பு இல்லை. என்று கூறினார்.

இதற்கிடையில் அமெரிக்காவுக்கு எதிரான நிலையை ரஷ்யா எடுத்துள்ளது. சமீபகாலமாக அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் சுமுக உறவு குறைந்து வருகிறது.


அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபடவில்லையென்று ரஷ்யா கூறியுள்ளது. இது குறித்து புடின் கூறியுள்ளதாவது -

தெற்கு ஈரானில் புஷெர் என்ற இடத்தில் ஈரான் அணு உலைக்கூடம் ஒன்றைக் கட்டி வருகிறது. அதற்கு ரஷ்யா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். ஈரானின் சமீபத்திய நடவடிக்கைகள், அணு ஆயுதம் தயாரிக்கும் நோக்கம் ஈரானுக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

அமைதி வழியில் அணு சக்தியைப் பயன்படுத்துவது உட்பட அனைத்துத் துறைகளிலும், ஈரானுடன் உள்ள உறவை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்வோம் என அவர் தெரிவித்தார்.




# லெபனான் முன்னாள் பிரதமர் கொலை விசாரணை நடத்த ஐ.நா முடிவு!



லெபனான் முன்னாள் பிரதமர் ரபீக் கரீரி படுகொலை செய்யப்பட்டமையை விசாரிப்பதற்கென ஐ.நா.செயலர் கொபி அனான் விசேட விசாரணைக் குழுவொன்றை லெபனானுக்கு அனுப்பவுள்ளார்.

ஐ.நா.பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் கொல்லப்பட்ட சூழல் மற்றும் அதனாலேற்பட்ட பின்விளைவுகள் தொடர்பாக ஆராயுமாறு, ஐ.நா. செயலர் கொபி அனானைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழுவின் தலைவராக அயர்லாந்தின் பிரதிப் பொலிஸ் ஆணையாளர் பீற்றர் பிற்ஸ் ஹேல்ட் நியமிக்கப்படவுள்ளார்.

இந்த விசாரணைக்குழு அடுத்த சில தினங்களில் லெபனான் தலைநகர் செல்லுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், முன்னாள் பிரதமர் கொல்லப்பட்ட சம்பவத்தை சர்வதேச விசாரணைக்குழு விசாரணை செய்வதனை லெபனான் உள்துறை அமைச்சர் சுலைமான் பிரான்ஜி நிராகரித்தார். முன்னாள் பிரதமரின் படுகொலை தொடர்பாக லெபனான் அமைக்கவுள்ள விசாரணைக் குழுவில் சுவிற்சர்லாந்து நாட்டின் விசாரணையாளர் ஒருவர் அங்கம் வகிக்கலாமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தனிப்பட்ட அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காக, கடந்த புதன்கிழமை லெபனான் சென்ற பிரான்ஸ் ஜனாதிபதியை லெபனான் பாதுகாப்பு அமைச்சர் அப்புதுல்ரகீம் முராட் வன்மையாக கண்டித்துள்ளார். இவரது விஜயம் லெபனான் அரசை அவமதிப்பதுடன் எதிர்க்கட்சியினரை ஊக்கப்படுத்தும் செயலென அவர் தெரிவித்தார்.

# இந்தியாவின் கடற்பகுதியை மீண்டும் சுனாமி தாக்காது!

## புவியியற்துறை நிபுணர் தெரிவிப்பு

இந்தியக் கடல் பகுதியை மீண்டும் சுனாமி தாக்காது என்று இந்திய புவியியல்துறை இயக்குனர் கே.என்.மாத்தூர் கூறியுள்ளார்.

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேரில் சமுத்ரா மாந்தன் என்ற கப்பலில் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது-

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட பெரிய பூமி அதிர்ச்சி சுனாமியாக மாறித் தாக்கியது போல, மீண்டும் ஒரு பெரிய சுனாமி தாக்குதல் நடைபெறக்கூடும் என்று சில மேலை நாட்டு புவியியல் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அது தவறு. கடலுக்கு அடியில் அப்படியொரு சுனாமி தாக்குதல் இந்தியக் கடற்பகுதியில் ஏற்பட வாய்ப்பே இல்லை.

கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதிக்குப் பின்னர் 9 ஆயிரத்து 500 முறை பின்விளைவுத் தாக்குதல்கள் ஏற்பட்டுள்ளன. இவை ஒரு வருடம் முதல் 2 வருடம் வரைகூட நீடிக்கும்.

இந்தப் பகுதியிலுள்ள பாரன் தீவில் ஒரேயொரு எரிமலை உள்ளது. கடந்த ஏனைய புவியியல் துறை நிபுணர்களும் கடந்த மாதம் 15 ஆம் திகதி, நானும் ஏனைய புவியியல்துறை நிபுணர்களும் அதனைச் சென்று பார்வையிட்டோம். 1995 ஆம் ஆண்டு முதல் அந்த எரிமலை அமைதியாகவே உள்ளது. அந்த எரிமலையின் மேற்பகுதியில் குன்றும், குழியுமான பள்ளங்களே காணப்படுகின்றன. ஆனால், அவையும் அமைதியாகவே உள்ளன.

பாரடாங் என்ற இடத்திலுள்ள மண் எரிமலையையும் பார்த்தோம். அங்கு மண் குமிழ்கள்தான் உள்ளன. அவையும் எரிமலைக்கான கொடூரம் இல்லாமல் சாதாரணமாகவே காணப்பட் டன.

அந்தமான் - நிகோபார் தீவில் 5 இடங்களில் பூகம்பத்தின் அளவு, இடம், காலம் முதலியவற்றைப் பதிவு செய்யும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் ஏற்பட்டுள்ள நில அமைப்பு கடற்படுகையின் வரைபட மாற்றம் முதலியவை குறித்த விவர அறிக்கையை இன்னும் ஓரிரு மாதங்களில் அரசுக்குச் சமர்ப்பிப்போம் என்று மாத்தூர் தெரிவித்தார்.

# பங்களாதேஷில் நடந்த படகு விபத்தில் 35 பேர் பலி; 150 பேரை காணவில்லை!



பங்களாதேஷில் பயணிகளை ஏற்றிச்சென்ற படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள் ளானதில் 37 பேர் உயி ரிழந்தமை உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது.

தலைநகர் டாக்கா அருகே உள்ள பதுலா மாவட்டத்தின் பூரி கங்கா நதியில் நேற்று முன்தினம் 200 பயணிகளுடன் சென்ற படகே விபத்துக் குள்ளானதில் பயணம் செய்தவர்களில் 150 பேர் காணாமற் போயுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இருள் சூழ்ந்த நேரத்திலேயே இடம் பெற்றதால் - எத்தனை பேர் உயிரிழந்தனர்? எத்தனைபேர் உயிர் தப்பினர்? என்ற விபரம் சரியாகத் தெரியவரவில்லையென பங்களாதேஷ் அரசின் நிர்வாக அதிகாரி மக்பூர் ரகுமான் தெரிவித்தார்.

இந்த விபத்துச் சம்பவம் - மற்றொரு படகுடன் குறித்த பயணிகள் படகு மோதியதாலேயே ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை உயிரிழந்தவர்களில் 37 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

# இரண்டு தலைகள் ஒட்டியபடி எகிப்தில் பிறந்த பெண் குழந்தை





எகிப்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு ஒரே உடலில் 2 தலைகள் ஒட்டிய நிலையில் பெண் குழந்தை பிறந்தது.

மனார் மகத் என்று பெயரிடப்பட்டுள்ள அந்தக் குழந்தையின் ஒரு தலையை எகிப்து டாக்டர்கள் சத்திர சிகிச்சைமூலம் வெற்றிகரமாக பிரித்தனர்.

இரண்டு தலையுடன் அந்தக் குழந்தையை வைத்தியசாலை தாதியொருவர் வைத்திருப்பதையும் சத்திர சிகிச்சை செய்து ஒரு தலை அகற்றப்பட்டபின் அந்தக் குழந்தை வைத்தியசாலையில் நலமுடன் இருப்பதையும் படங்களில் காணலாம்.

## ஹெயிட்டியில் உள்நாட்டுக் கலகம்

# சிறையில் அடைக்கப்பட்ட பிரதமர் ஆயுதக் குழுவொன்றினால் மீட்பு!



அட்லாண்டிக் சமுத்திரப் பகுதியில் கியூபா மற்றும் போர்ட்டோரிக்கோ இடையேயுள்ள குட்டித்தீவு ஹெயிட்டி. இங்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு உள் நாட்டுக் கலவரம் ஏற்பட்டது. இதன்போது, அந்த நாட்டின் ஜனாதிபதியாக ஜீன் பெட்ராண்ட்டும், பிரதமராக இவான் நெப்டியூனும் இருந்தனர். உள்நாட்டுக் கலவரம் உச்சக் கட்டத்தை அடைந்ததைத் தொடர்ந்து அதிபர் பெட்ராண்ட் நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாட்டில் அடைக்கலம் புகுந்தார். இதனால் அவரது ஆட்சியும் கவிழ்ந்தது.

புதிதாக அமைக்கப்பட்ட இடைக்கால அரசு - பிரதமர் இவான் நெப்டியூன், அவரது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைக் கைது செய்து சிறையில் அடைத்தது. நெப்டியூன் மீது கொலை மற்றும் ஊழல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. அவரும் அவரது ஆதரவாளர்களும் போர்ட் ஒப் பிரின்ஸ் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அந்த நாட்டின் பெரிய சிறை இதுதான். இதில் மொத்தம் 1000 கைதிகள் இருந்தனர்.

இந்த நிலையில் புதிய அரசை எதிர்ப்பவர்கள் சிறை மீது திடீர் தாக்குதல் நடத்தினர்.

3 வாகனங்களில் வந்த அவர்கள் சிறைக்கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்தனர். இதன்போது சிறைக் காவலர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. சிறையில் பாதுகாப்புப் படையினர் குறைவாகவே இருந்தனர்.

நீண்ட நேரம் நடந்த இந்தத் துப்பாக்கிச் சண்டையில் சிறைக் காவலாளிகள் மற்றும் அரச எதிர்ப்பாளர்கள் உட்பட 15 பேர் பலியாகினர்.

சிறையில் புகுந்த அரச எதிர்ப்பாளர்கள், முன்னாள் பிரதமர் நெப்டியூன் மற்றும் முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோசி லெர்மி பிரிவெட் ஆகியோரை மீட்டனர். அத்துடன் சிறையிலிருந்த வேறு சில அதிகாரிகளையும் மீட்டனர். மீட்கப்பட்ட நெப்டியூன் மற்றும் பிரிவேட் ஆகியோரை அவர்கள் அழைத்துச்சென்றுவிட்டனர். இந்தக் கலவரத்தில் சிறையில் இருந்த கைதிகளில் 500 பேர் தப்பியோடிவிட்டனர்.


சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மற்றும் கைதிகளைக் கைதுசெய்ய அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிகளில் தீவிர கண்காணிப்பு நடைபெற்று வருகிறது.

ஹெயிட்டி வீதிகளில் முன்னாள் அரச அதிபரின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது. இதற்கிடையே அங்கு அமைதியை ஏற்படுத்த, பிரேசில் தலைமையில் 7 ஆயிரம் பேர் கொண்ட ஐ.நா. அமைதிப்படை விரைந்துள்ளது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாத்தறைக்கு மீண்டும் நேற்று முதல் ரயில்சேவை!



சுனாமியால் முற்றாகச் சேதமடைந்த மாத்தறை - அம்பலாங்கொட ரயில் பாதை திருத்தப்பட்டு நேற்று மீண்டும் முதற்தடவையாக ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்படி கொழும்பு ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட சமுத்திர தேவி ரயில் மாத்தறையைச் சென்றடைந்தது.

இந்தப் பகுதியிலுள்ள மக்கள் சுனாமியால் ஏற்பட்டபாதிப்புக்களை நீண்டகாலத்திற்கு மறக்கமாட்டார்களென ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் பிரியால் டி சில்வா தெரிவித்தார்.

திருத்தப்பட்ட ரயில் பாதைகளைப் பரிசோதிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வாகவே இந்த விசேட ரயிலினை சேவையில் விடுவதென ரயில்வே பொது முகாமையாளர் பிரியால் டி சில்வா தெரிவித்தார்.

நேற்று ரயில் எஞ்சினுடன் ஆறு பெட்டிகள் பரீட்சார்த்தமாக சோதனைக்கு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வை முறையற்றது

## ஆசிய மனித உரிமைகள் அமைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கிடைக்கின்ற நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வை விதிக்கும் அரசாங்கத்தின் நடைமுறையானது பாரதூரமானது என ஆசிய மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் பசில் பெர்னாண்டோ இது குறித்து கருத்து வெளியிடுகையில் -

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிவாரண உதவிகளுக்கு வரி விதிக்கப்படும் செயலானது - இலங்கை தொடர்பான நல்லெண்ணத்தைப் பாதிக்கக்கூடும்.

அத்துடன் இவ்வாறு வரி விதிக்கப்படும் செயலானது, இந்த நிவாரணப் பொருட்கள் இலங்கைக்குக் கிடைத்த பின்னர் விற்பனை செய்யப்படுவதாகவே அர்த்தப்படும்.

எனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் உதவிகள் எதிர்காலத்தில் கிடைக்காமல் போகக்கூடும்.

எனவே இதனை ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து தடுக்க வேண்டும்.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரும் நிவாரணங்களுக்கு முதலில் அரசாங்கம் சுங்கத்தீர்வையை விதிக்கவில்லை. எனினும் பின்னர் அது அவசிய மருத்துவப் பொருட்கள் மற்றும் பால்மா தவிர்ந்த நிவாரணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வையை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (01)

### ஆயுதக்...

தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மனோகரன் என்பவர் கொல்லப்பட்டதாகவும், சுதாகரன் என்பவர் படுகாயமடைந்ததாகவும் உள்ளூர்வாசிகளை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவரின் சடலம் வெலிக்கந்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதுடன், காயமடைந்தவர் பொலனறுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### திடீர் சுகவீனமுற்ற...

சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பின்னர் ஹெலிகொப்டர் மூலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இவர்களுக்கு பயிற்சி வழங்கிய இராணுவ அதிகாரி இந்தச் சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க கருத்து வெளியிடுகையில் -

குறிப்பிட்ட சிப்பாய்களின் உடலினுள் பி-4 ரக வெடிமருந்து உட்சென்றிருக்கிறது. சுவாசித்ததால் இந்தநிலை ஏற்பட்டிருக்கலாம். அல்லது வெடிமருந்தை கையாண்ட பின்னர் கைகளை நன்கு கழுவாமல் உணவருந்தியமையால் ஏற்பட்டிருக்கலாம். இருப்பினும் இது தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்த இராணுவச் சிப்பாய்கள், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம், செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. செய்தியாளரொருவர் அங்கு நின்ற இராணுவ அதிகாரியொருவரால் தடுக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

வன்னிப் பத்திரிகையாளர் சங்கம், இது தொடர்பாக தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளதோடு, இது குறித்து விசாரணை நடத்துமாறு இராணுவத் தளபதியை கடிதம் மூலம் கேட்டுள்ளது. (01)

# முல்லைத்தீவில் 100 தற்காலிக வீடுகள்

# தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கையளிப்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் தமது வாழ்வாதாரங்களை இழந்து, நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துக் கொடுத்து வருகிறது.

முள்ளியாவளை வித்தியானந்தாக் கல்லூரி நலன்புரி நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவந்த 360 குடும்பங்களில் 100 குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகளைக் கொண்ட குடியிருப்புத் தொகுதி நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் முல்லைத்தீவிலுள்ள உண்ணாப்புலவு என்னும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக ஒருங்கிணைப்பில் நிறுவப்பட்ட இந்தக் குடியிருப்பு திறப்புவிழா நிகழ்வில் -

தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லைத்தீவு மாவட்டப் பணிப்பாளர் மு.ராமமூர்த்தி, கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற் புலிகளின் நகரப்புறத் தளபதி தினேஷ், கள்ளப்பாடு பிரதேச கிராம அலுவலர் சேந்தன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சுனாமி பேரலை அனர்த்த விசேட பணிப்பாளர் றெஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, குடியிருத்தப்பட்ட குடும்பங்களுக்கான அடிப்படைத் தேவைகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியுள்ளது.



குறிப்பாக சமையல் உபகரணங்கள், உலர் உணவுப் பொருட்கள், நுளம்பு வலைகள், டோச் லைட், மண்ணெண்ணை அடுப்பு போன்றவை வழங்கப்பட்டன. இந்தப் பொருட்களுடன் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா ஆயிரம் ரூபா பணமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - சுனாமி அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அந்த மாவட்டத்திலுள்ள தம்படைததிடலில் கட்ந்த 16 ஆம் திகதி திறந்து வைக்கப்படவிருந்த 150 தற்காலிக வீடுகளைக் கொண்ட புனர்வாழ்வுக்கழக குடியிருப்பானது தவிர்க்கமுடியாத காரணத்தால் திறந்துவைக்கப்படவில்லை.

150 வீடுகளுடன் மேலும் பாதிக்கப்பட்ட சில குடும்பங்கள் தங்களையும் அந்தக் குடியிருப்புடன் இணைத்துக் குடியிருத்துமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதையடுத்து அவர்களுக்கான வீடுகளும் ஒருங்கிணைத்து அமைக்கப்படவுள்ளன.

இந்தக் குடியிருப்பு இன்று காலை 9 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் திறந்து வைக்கப்படவுள்ளது.

# ஜேர்மனி அமைச்சர் யாழ். வருகிறார்!

(கொழும்பு)

ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று இலங்கை வந்துள்ள அவர் கொழும்பில் அமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடியபின் நாளை யாழ்ப்பாணத்துக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை இவர் பார்வையிடுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரிட்டிஷ் இளவரசருக்கு மட்டக்களப்பு செல்லத்தடை

(கொழும்பு)

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தை பார்வையிடுவதற்கு விருப்பம் தெரிவித்த போதும் இலங்கை அரசு அதற்குத் தடைகளை விதித்துவருவதாக பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தவார இறுதிப்பகுதியில் இலங்கை வரவுள்ள இளவரசர் சாள்ஸ் சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவுள்ளார். எனினும், இவரை மட்டக்களப்புக்குச் செல்லவிடாமல் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே ஐ.நா.பொதுச்செயலர் கொபி அனானையும் வட பகுதிகளுக்கு செல்லவிடாது தடுத்தமையும் குறிப்படத்தக்கது.

### ஆயுதக்குழு...

யளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மட்டக்களப்பு - கிரானைச் சேர்ந்த வடிவேல் ரவிச்சந்திரன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக இராணுவ அம்புலன்ஸ் வண்டி மூலம் பொலநறுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கிரான்னைச் சேர்ந்த இவர், கொழும்பு செல்வதற்காக ஓட்டமாவடியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்றவேளையே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலுக்கிலக்கானவர் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவொன்றின் உறுப்பினரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### புலிகளின்...

குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமது அலுவலகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் மூவர் ஆயுதங்களுடன் மோட்டார் சைககிள்களில் நடமாடுவதை அவதானித்த புலிகள், இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து- கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும், பொலிஸாரும் உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையை அவதானித்தனர்.

### சொல்ஹெய்ம்...

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாடு கைச்சாததிடப்பட்டு, நாளையுடன் மூன்றாண்டுகள் நிறைவு பெறுவது குறிப்பிடத்தக்கது.

### பொது கட்டமைப்பை...

கள் முனைப்புடன் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவித்தன.

நேற்றிரவு கொழும்பு வந்த எரிக்சொல்ஹெய்ம் ஊடாக அரசு இது தொடர்பான பதிலை புலிகளுக்கு அனுப்பிவைக்கும் என்றும் இன்னொரு தகவல் தெரிவித்தது.

நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரம் குறித்து சில தரப்புகள் சந்தேகம் வெளியிட்டு வரும் நிலையிலேயே, எப்படியாவது ஒரு இணக்கப்பாட்டை இரு தரப்புக்களுக்குமிடையில் ஏற்படுத்திவிட வேண்டும் என்று அனுசரணையாளர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் தீவிர முயற்சி காரணமாக அடுத்த சில நாட்களில் முக்கிய முடிவுகள், இணக்கப்பாடுகள் உருவாக சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

### ஜோர்ஜ் புஷ்...

கையெழுத்திட்டனர். இவர்கள் இருவரும் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தினர்.

இன்று காலை இவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாத்தறைப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுவதுடன், நிலைமைகளையும் மதிப்பீடு செய்யவுள்ளனர். இதன் பின்னர் கொழும்பு திரும்பும் இவர்கள் இன்று மாலையே மாலைதீவிற்கு பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு முதன்முறையாக வருகைதந்துள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்புப் பணியில் பொலிஸ், இராணுவம், விமானப் படை மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த பாதுகாப்பு பணிதொடர்பாக தாம் கண்காணிப்பை கடுமையான முறையில் மேற்கொண்டு வருவதாக கொழும்புக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்க இரகசிய பாதுகாப்புப் பிரிவும் இலங்கைப் படையினருடன் இணைந்து நெருக்கமான வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்றுகாலை மாத்தறைப் பகுதிக்கு இவர்கள் செல்வதை முன்னிட்டு அங்கும் முப்படையைச் சேர்ந்த 1000 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாக மாத்தறை பொலிஸ பேச்சாளர் தெரிவித்தார்.

இவர்களது இந்த விஜயத்தின் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளின் சேதவிபரங்கள்,அந்த நாடுகளுக்கு அமெரிக்கா எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்பது குறித்து இவர்கள் இருவரும் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வீட்டுக்குள்...

யுவதியைக் கடத்திச் சென்றவர்கள் கத்திகள், வாள்கள் போன்ற அபாயகரமான ஆயுதங்களை வைத்திருந்ததாகவும், தனது கணவர் கொழும்புக்குச் சென்றிருந்தபடியால் தானும் மகளுமே தனித்திருந்ததாகவும் தாயார் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (48)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

பௌதிகவியல் II
Physics II


ஆசிரியர் - மா.கருணாநிதி B.Sc (spl)

மூன்று மணித்தியாலம்
Three hours

## பகுதி A அமைப்புக் கட்டுரை
## நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக


**1)** பரிவுக் குழாயைப் பயன்படுத்தி வளியில் ஒலியின் வேகத்தையும், குழாயின் முனைத் திருத்தத்தையும் துணியும் பரிசோத்னை ஒன்றில் உபகரண ஒழுங்கமைப்பின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

a) உபகரண ஒழுங்கமைப்பை பூரணப்படுத்தி பெயரிடுக?




b) குழாயில் அடிப்படைச் சுரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கை யாது?


c) அடிப்படைச்சுரத்தின் அலைவடிவத்தை தெளிவாக வரைந்து தேவையான தரவுகளைக் குறிக்க?



d) அடிப்படைச்சுரத்தின் போது குழாயின் நீளம் l எனின் வளியில் ஒலியின் வேகம் (V) குழாயின் முனைத்திருத்தம் (C) பரிவுறும் அதிர்வெண் (F) என்பவற்றை தொடர்வுபடுத்தும் கோவையை எழுதுக,


e) வளியில் ஒலியின் வேகம் (V) ஐயும் முனைத்திருத்தம் (C) ஐயும் துணியுமாறு பகுதி (D) இல் உள்ள கோவையை நேர்கோட்டு வரைபுக்கு ஒழுங்குபடுத்துக.

பகுதி (e) இற்கான வரைபை வரைக? (அச்சுக்களைத் தெளிவாகக் குறிக்க?




f) நீருக்குப் பதிலாக அற்ககோல் தரப்படுமாயின் மேலே பெறப்படும் (V), (C) இன் பெறுமதியில் என்னமாற்றங்களை எதிர்பார்ப்பீர்?

**2)** திரவம் ஒன்றின் தன்வெப்பக்கொள்ளளவைத் துணிவதற்கான தொடர்ந்த பாய்ச்சல் ஆய்வுக்கருவி ஒன்றை படம் காட்டுகிறது.




a) X, Y,F,H,T,T, என்பவற்றைப் பெயரிடுக?

X - 1.2 h -

y - $t_1$, $t_2$

f -

(i) f ஆனது வெற்றிடத்தால் சூழப்படுவதேன்?

(ii) வெளிக்கஞ்சுகத்தில் குளிர் நீர் எடுக்கப்படுவதேன்

b) ஆய்வுகூடத்தில் பெறப்பட்ட அளவீடுகள் கீழே தரப்பட்டுள்ளன

| | $\theta_1$°C | $\theta_2$°C | திரவ பாய்ச்சல் வீதம் gs-1 | மின் அ.வி. (V) | மின்னோட்டம் (A) |
|---|---|---|---|---|---|
| பரிசோதனை 1 | 28.4 | 30.4 | 3.4 | 3.1 | 4.0 |
| பரிசோதனை 2 | 28.4 | 30.4 | 2.6 | 2.8 | 3.1 |

1. இப்பரிசோதனை ஏன் இரு முறை மீளச் செய்யப்பட்டது,
   a. இரு முறையும் $\theta_1$ $\theta_2$ என்பன ஒரே பெறுமானங்களில் ஏன் செப்பமிடப்பட்டன.
   b. திரவத்தின் தன்வெப்பக்கொள்ளளவிற்கான பெறுமானத்தைக் ககாண்க?
   c. சூழலுக்கான வெப்ப இழப்பு வீதம், யாது?

c). பாய்ச்சல் குழாயின் வெப்பக் கொள்ளளவு கணிப்புக்களுக்கு தேவைப்படாமை இப்பரிசோதனையின் சிறப்பு அம்சமாகும். இது எவ்வாறென விளக்குக?

d). திரவத்தின் தன்வெப்பக் கொள்ளளவில் உள்ள வழுவீதத்தைக் குறைப்பதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கை யாது?

e). இம் முறையைப் பயன்படுத்தி வாயுவின் தன்வெப்பக் கொள்ளளவைத் துணிய முடியுமா? விளக்குக.

**3)** செயற்பாட்டு விரியலாக்கி ஒன்றின் சுற்றுக் குறியீட்டைத் தெளிவாக வரைந்து நேர்மாறு பெய்ப்பு (V) நேர்மாறாத பெய்ப்பு ($V_+$) பயப்பு ($V_0$) முதல் வழங்கல் +($V_3$) என்பவற்றைத் தெளிவாகக் குறிக்க?


b) செயற்பாட்டு விரிவாக்கியின் திறந்த தடநயம் A இற்கான கோவையை V+,V-$V_0$ சார்பில் எழுதுக?

c) கீழே உள்ள நிபந்தனைகளின் கீழ் (V) இன் முனைவுத் தன்மையை எழுதுக?


I. ($V_1$) >V எனின்..................

II. ($V_1$) < V எனின் ..................

d) $V_0$ எதிர் V+ V வரையை வரைக?




e) கீழே தரப்பட்டுள்ள சுற்றானது சைகைக்காட்டி ஒன்றை குறிக்கின்றது இதில் பயன்படுத்தப்படும் L,D,R ஆனது இருளில் IM Ω தடையையும் ஒளியில் தடையையும் கொண்டுள்ளது.




1) நேர்மாறு பெய்ப்பின் அழுத்தம் (V) ஐக் கணிக்க?
2) இருள் உள்ள போது நேர் மாறாத பெய்ப்பின் அழுத்தம் யாது?
3) ஒளியுள்ளபோது நேர்மாறாத பெய்ப்பின் அழுத்தம் யாது?
4) இருளிலா அல்லது ஒளியுள்ள போதா L,E,D ஒளிரும் (விளக்குக)

**4)** a) கருச்சக்தியானது வெப்பசக்தியாக மாற்றப்படும் இரு தொழிற்பாடுகள் தருக?

b) மேலே குறிப்பிட்ட இரு தொழிற்பாடுகளின்போதும் எவ்வாறு சக்திவெளியிடப் படுகிறது என எழுதுக?

c) வெளியிடப்படும் சக்தியைத் துணிவதற்கான கோவையை எழுதுக?

d) எவ்வாறான கருக்களில் கருபிணைவு நடைபெறும்?

e) ஏன் ஒவ்வொரு கருப்பினவு தாக்கத்தின் போது சில நியூத்திரன்கள் வெளியிடப்ப டுவது அவசியமாகிறது.

f) அணு உலைகள் ஏன் மிக வலிமையாக காவலிடப்பட்டுள்ளன?

g) அணு உலை (Nuclear , reactor) ஒன்று 550 MW மின்வலுவை உற்பத்தி செய்கின்றது. விரயமாகும். வெப்பத்தை அளவிடுவதற்கு அதனூடு $2.7x10^1Kgs^{-1}$ என்ற வீதத்தில் கடல் நீர் செலுத்தப்படுகின்றது. இதன் வெப்பநிலை 10. 3K இனால் உயர்கிறது. பயன்படுத்தப்படும் கரு எரிபொருளில் (Nuclear, Fuel ) திணிவு அழிவும் வீதத்தைக் காண்க. (ஒளியின் வேகம் 3x108 $ms^{-1}$ , கடல்நீரின் தன்வெப்பக் கொள்வனவு 4000 $Jkg^{-1}K^{-1}$ )

## பகுதி B அமைப்புக் கட்டுரை
## நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக

**1.** a. (i) உடலின் சடத்துவத்திருப்பம் என்பதனை வரையறுக்க?

(ii) தரப்பட்ட உடல் ஒன்றின் சடத்துவத்திருப்பம் ஆனது ஏன் குறித்த பெறு மானமாக இருப்பதில்லை?

(iii) விறைத்த உடல் ஒன்று கோணவேகம் w உடன் ஓர் அக்கப்பற்றி சுழல் கின்றது. அதன் சுழற்சி இயக்கசக்தி $1/2Iw^2$ என நிறுவுக. இங்கு I உட லின் அச்சுப் பற்றி சடத்துவத் திருப்பம் ஆகும். (உதவி : உடல் ஒன்று சிறிய துணிக்கைகளின் சேர்த்தியாகும்)

b. மோட்டார் கார் ஒன்று பறப்புசில்லில் சேமிக்கப்பட்டுள்ள இயக்கசக்தியைப் பயன்படுத்தி இயங்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. காரின் பறப்புச் சில்லானது $300Kgm^2$ சடத்துவத் திருப்பம் உடையது அது அதியுயர் சுழற்சிவீதம் $4200rpm^2$ இனை அடையுமாறு மின் மோட்டார்களால் ஆர்முடுக்கப்படுகின்றது.

(i) பறப்புச் சில்லில் சேமிக்கப்பட்டுள்ள உயர் இயக்க சக்தியை காண்க.

(ii) காரினை இயக்கத் தேவையான சராசரி வலு 15kw ஆகும். காரானது $50kgh^{-1}$ சராசரிக் கதியுடன் இயங்குகின்றது எனக்கொண்டு கார் இயங்கும் உயர் தூரத்தைக் காண்க.

(iii) பகுதி b(II) உள்ள கணித்தலின்போது உமது எடுகோள் யாது?

**2.** பகுதி A இற்கு அல்லது B இற்கு விடை தருக.

A) a. வெப்ப இயக்கவியல் பூச்சிய விதியையும், முதலாம் விதியையும் கூறுக.

b. வெப்ப இயக்கவியல் முதலாம் விதியை கோவை வடிவில் எழுதுக?

c. சமவெப்ப செயன்முறை, சேறலில்லா செயன்முறை என்பவற்றுடன் வெப்ப இயக்கவியல் முதலாம் விதியைத் தொடர்புபடுத்துக.

d. 1. வளிமண்டல அமுக்கத்தில் நீரின் ஆவியாதலின் தன்மறை வெப்பம் $2.26x10^6Jkg^1$ ஆகும். 1 வளிமண்டல அமுக்கத்தில் 1kg நீர் முற்றாக ஆவியாக்கப்படுகின்றது.

(i) நீரின் கனவளவு யாது?

(ii) நீராவியின் கனவளவு யாது?

(iii) இச்செயன்முறையின்போது வெளியமுக்கத்துக்கு எதிராகச் செய்யப் படும் வேலை யாது?

(iv) ஆவியாதலின்போது உட்சக்தி அதிகரிப்பு யாது?
நீரின் அடர்த்தி $1000kgm^{-3}$
1 வளிமண்டல அமுக்கம் = $1x10^5pa$
நீரின் சார்மூலக்கூற்றுத் திணிவு =18
அகிலவாயு மாறிலி 8.3 $Jmol^{-1}k^{-1}$

(B) கதிர்தொழிற்பாட்டு சமதானி தல்லியம் ($\frac{207}{81}$ Tஆனது) சராசரி சக்தி 1.5 Me Vஐ உடைய 6 துணிக்கையை காலுகின்றது. அத்துடன் அது y கதிர்ப்பையும் நிகழ்த்துகின்றது. தல்லியத்தின் அரைஆயுட் காலம் 135 நாட்களாகும்.

a) i) $B^{-1}$துணிக்கையையும் y துணிக்கையையும் மாத்திரம் காலப்படுவதை காட்டுவதற்கான எளிய பரிசோதனை ஒன்றை சுருக்கமாகத் தருக?

(ii) இந்தக் கதிர்த் தொழிற்பாட்டுக்கான சமன்பாட்டை எழுதுக? y கதிர்ப்பு நிகழ்வதால் மகள்கருவின் சக்தியில் என்ன மாற்றம் நிகழும்?

(b)i) 1.5MeV சக்தியுடைய $B^{-1}$ துணிக்கை என்பதனால் யாது விளங்குகிறீர்? இச்சக்தியை யூலில் காண்க.

ii) இக்கதிர்த் தொழிற்பாட்டின் கதிர்த் தொழிற்பாட்டு மாறிலியைக் காண்க? உதவி - T1/2 = 0.693 1/π


(c) 207 கிராம் தல்லியமானது $6x10^{23}$ அணுக்களைக் கொண்டுள்ளது.

i) 1g துல்லியமானது B-1 கதிர்ப்பை நிகழ்த்தும்போது கதிர்ப்பின் B-1 இன் மொத்த சக்தியைக் காண்க?

ii) 1g தல்லியத்தின் ஆரம்பக்கதிர்த் தொழிற்பாட்டு வீதம் யாது?

iii) 1g தல்லியம் கதிர்த்தொழிற்பாட்டை நிகழ்த்தும்போது B-1 துணிக்கையில் இருந்து பெறக்கூடிய ஆரம்ப வலுவைக் காண்க?

**3)** ஹோலின் விளைவு என்பதனை விளக்குக?




படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோல் 1 அம்பியர் மின்னோட்டம் காவும் செவ்வகக்கடத்தி ஒன்று சீரான காந்தப்பாய அடர்த்தி B இற்கு செங்குத்தாக வைக்கப்பட்டுள்ளது.

i) படத்தை உமது விடைத்தாளில் பிரதிசெய்து ஏற்றக் காவியின் தொழிற்படும் விசைகளைக் குறிப்பிடுக.

ii) ஹோலின் அழுத்தவேறுபாடு (Vh) இற்கான கோவையை பெறுக. (பயன்படுத்தப்படும் குறிகளை அடையாளப்படுத்துக)

iii) இக்கடத்தியினூடான மின்னோட்டம் 1இற்கான கோவையை எழுதுக.


iv) 4mm தடிப்புடைய ஒரு செவ்வகக் கடத்தியினூடு 0.5A மின்னோட்டம் பாய்கின்றது. இப்பகுதிக்கு செங்குத்தாக 0.2 T காந்தப்புலம் பிரயோகிக் கப்படுகின்றது. எதிர் ஓரங்களுக்கு இடையில் 6mV ஹோல் அழுத்த வேறு பாடு உருவாக்கப்பட்டது. அலகுக் கனவளவிலுள்ள ஏற்றக்காவியின் எண்ணிக்கையைக் காண்க. (இலத்திரன் ஏற்றம் 16x 10-19C )

v) ஹோலின் விளைவின் பிரயோகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.


4. கோணம் பெரிதாக்கம் என்பதனை வரையறுக்க?
3cm குவிய நீளம் உடைய குவிவு வில்லை ஒன்றில் இருந்து 3.6cm இல் முதலச்சில் ஒரு புள்ளிப் பொருள் வைக்கப்பட்டுள்ளது. பொருள் இருக்கும் பக்கத்துக்கு எதிர்ப்பக்கத்தில் இவ்வில்லையில் இருந்து 26 cm இல் 16 cm குவிய நீளமுடைய குவிவுவில்லை ஓரச்சாக வைக்கப்பட்டுள்ளது. இவ்விரு வில்லைகளாலும் உண்டாக்கப்படும் விம்பத்தின் நிலையைக் காண்க.

சாதாரண பார்வையுடைய ஒருவரால் (தெ.பா.இழிவுதூரம் 25cm) கூட்டு நுணுக்குக் காட்டியாகப் பயன்படுத்தப்படுவதற்கு இவ்வமைப்பு ஏன் உகந்ததல்ல என விளக்குக. இவ் அவதானி இவ்விரு வில்லைகளையும் ஒரு கூட்டு நுணுக்குக்காட்டியாகப் பயன்படுத்த விரும்புகின்றார். இதற்கு முதலாவது வில்லையில் இருந்து இரண்டாவது வில்லையை எத்தூரத்தில் வைக்கவேண்டும்?
இந்நிலையில் கோணப் பெரிதாக்கத்தைக் காண்க.

**5)** A அல்லது B இற்கு விடை தருக?
A) மின்முதல் ஒன்றின் மின் இயக்கவிசை, அக்த்தடை என்பவற்றைத் துணிவதற்காகச் சுற்று ஒன்றைப்படம் காட்டுகின்றது.




a) முதலின் மின் இயக்கவிசை E, அதன் T, அம்பியர் மானி I தடைப்பெட்டியின் வாசிப்பு R என்பவற்றைத் தொடர்புபடுத்தும் கோவையை எழுதுக.R எதிர் I/I வரைபை வரையக் கூடிய வகையில் இச்சமன்பாட்டை உருமாற்றுக.
b) இம்மாணவியால் பெறப்பட்ட R எதிர் I/I வரைபு கீழே தரப்பட்டுள்ளது.





வரைபைப் பயன்படுத்தி
i) முதலின் மின் இயக்க விசை E ஐக் காண்க
ii) முதலின் அகத்தடை r ஐக் காண்க
iii) முதலின் குறும் சுற்றாதலின் போதான உயர் மின்னோட்டம் யாது?


c) i) I இம்முதலில் இருந்து வெளிச்சுற்றில் உயர்வலு மாற்றீடு செய்யப்படுவதற்கான நிபந்தனையை எழுதுக,
ii) இவ்வுயர் வலுவை மதிப்பிடுக?

d) இப்பரிசோதனையில் துணியப்பட்ட மின் இயக்க விசையை வாய்ப்புப் பார்ப்பதற்கு ஆய்வு கூடத்தில் பயன்படுத்தக் கூடிய எளிய கருவி ஒன்றினைத் தருக?

B. a) இரு பெய்ப்புக்களைக் கொண்ட "NAND" கதவத்திற்கான உண்மை அட்டவணையைத் தருக?
b) "NAND" கதவத்தினை மாத்திரம் உபயோகித்து NOT கதவத்தினை பெறுவதற்கான உண்மையட்டவணையையும், தருக்க சுற்றறையும் தருக?
c) கீழே தரப்பட்டுள்ள தருக்க சுற்றானது "NAND" கதவத்தினை மாத்திரம் கொண்டு உருவாக்கப்பட்ட "OR" கதவம் ஆகும் என்பதனை உண்மை அட்டவணையில் மூலம் காட்டுக.




d) பெரும்பான்மை வாக்கு அடிப்படையில் முடிவினைத் தெரிவு செய்யும் தொகுதி ஒன்றினை கீழே உள்ள வரிப்படம் காட்டுகின்றது. அரைப்பங்கிற்கு மேற்பட்டோரின் தெரிவு முடிவாகக் கருதப்படும்.




இங்கு A,B,C என்பன பெய்ப்புக்களாகும். பெய்ப்பின் ஆளிகள் மூடப்பட்ட போது தருக்கநிலை "I" எனவும், மூடப்படாதபோது தருக்க நிலை "O" எனவும் கொள்ளப்படும் பயப்பின் தருக்க நிலை "I" எனின் பெரும்பான்மைத் தெரிவு ஆகும்.

i) பயப்புக்கான பூலியன் கோவையைத் (தருக்க கோவை) எழுதுக
ii) இத்தொகுதிக்கான உண்மை அட்டவணையை எழுதுக
iii) "NAND" கதவத்தை மாத்திரம் பயன்படுத்தி இவ்வமைப்பை மீளவடிவமைக்க

**6.** a) ஊக்கின் விதியை எழுதுக?
1) இழுவைத்தகைப்பு (O) இழுவை விகாரம் ($\mathcal{E}$) என்பவற்றை வரையறுக்க
2) யங்கின் மட்டு என்பதால் யாது விளங்குகிறீர்
3) இழுவைத்தகைப்பு எதிர் இழுவை விகார வரைபை வரைக
b) கிடையாக 2m இடைத்தூரத்தில் உள்ள இரு புள்ளிகள் P,Q இற்கிடையே 2m நீளமான உருவாக்குக்கம்பி ஒன்று கட்டப்பட்டுள்ளது அதன் குறுக்கு வெட்டுப்பரப்பு $7.8x10^{-2}m^2$ ஆகும். அதன் மையப்பகுதியில் W நிறை தொங்கவிடப்பட கம்பியின் மையப்பகுதி 0.1m ஆல் கீழே தாழ்கின்றது.

I. சமநிலையில் கம்பியின் மொத்த நீளத்தைக் கணிக்க
II. கம்பியின் யங்கின் மட்டு $2.1x10Nm^{-2}$ எனின் கம்பியில் உள்ள இழுவை T ஐக் காண்க
III. சுமை ஏற்றப்பட்டுள்ள போது இழை நிலைக்குத்துடன் ஆக்கும் கோணத்தைக் காணக
IV. கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள நிறை W வைக் காண்க.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்


## பௌதிகவியல் I Physics I


**ஆசிரியர் – மா.கருணாநிதி B.Sc (spl)**

மூன்று மணித்தியாலம் Three hours


*(தொடர்ச்சி....)*

40) படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் அரைக்கோளக் கண்ணாடிக் கோளமொன்றின் மீது ஒளிக்கதிர் RS விழுகிறது. கண்ணாடி வளி அவதிக்கோணம் Θ ஆகும். வெவ்வேறு அலைநீளம் π உடைய ஒளியானது படுமாயின் அவதிக்கோணம் Θ இன் மாறலைத் திறம்படக் காட்டுவது.








41) பின்வரும் மின்சுற்றுகளில் எதில் பரிவு நிகழும்.





42) குறித்த திணிவுடைய இலட்சிய வாயு ஒன்றின் இருநிலையில் வெப்பச் செயன்முறை நிகழ்த்தப்படுகிறது. முதலாவது நிலையில் வாயுவின் உள்ளீடு சக்தி 600J ஆல் அதிகரித்தது இரண்டாவது நிலையில் 600J வேலை செய்தது. இவ்விரு செயற்பாடுகளிற்கும், வாயுவிற்கு முறையே 600J, 1200J சக்தி வழங்கப்பட்டது.
A. இரு செயமுறைகளிலும் வெப்பநிலை அதிகரிப்புக்கள் சமனாகும்.
B. இரண்டாம் நிலையில் வாயுவின் உடசக்தி 600J ஆல் அதிகரிக்கும்.
C. முதலாம் நிலையில் வாயுவின் வெப்பநிலையிலும், இரண்டாம் நிலையில் வாயுவின் வெப்பநிலை இருமடங்காகும்.
மேலே உள்ள கூற்றுகளில்
1. A மாத்திரம் சரியானது
2. B மாத்திரம் சரியானது
3. C மாத்திரம் சரியானது
4. Aயும் Bயும் மாத்திரம் சரியானது
5. A,B,C மூன்றும் சரியானது

43) பூமியின் மீது AB, CD எனும் இரு துளைகள் படத்தில் காட்டியுள்ளது போல் உருவாக்கப்பட்டுள்ளன. புள்ளிகள் A,V இன் வழியே இரு சிறிய திணிவுகள் P,Q இயங்கவிடப்படின் அவை எளிமை இசை இயக்கத்தை ஆற்றும் அலைவு காலங்கள் முறையே Tp, tq ஆயின்




1. $T_P > T_Q$
2. $T_P < T_Q$
3. $T_P = T_Q$
4. $T_P, T_Q$ என்பன d இல் தங்கியுள்ளது.
5. மேற்கூறிய விடைகளில் எதுவும் பொதுத்தமல்ல


44) XYZ என்பது சீரான மின்புலம் (E) இலுள்ள சமபக்க முக்கோணி ஆகும். முக்கோணியின் ஒரு பக்க நீளம் S ஆகும்.




X→Y, Y→Z, Z→X திசை வழியே அலகு ஏற்றம் கொண்டு செல்லப்படுகின்றது.
ஏற்றத்தின் மீது செய்யப்பட்ட வேலையைச் சரியாகக் குறிப்பது

| | X→Y | Y→Z | Z→X |
|---|---|---|---|
| 1. | Es | +Escos60 | -Escos60 |
| 2. | O | -Escos60 | +Escos60 |
| 3. | Es | +Essin60 | -Essin60 |
| 4. | O | +Essin60 | -Essin60 |
| 5. | O | -Essin60 | +Essin60 |

45) படத்தில் காட்டியுள்ள சுற்றில் X, Y என்பன இரு செப்புக்கடத்திகளாகும். அவை சம நீளமானவை. ஆனால், வேறுவேறு குறுக்கு வெட்டுப் பரப்பு உள்ளவை. மின்னோட்டம் பாயும் போது X இன் வெப்பநிலை Y இனதிலும் கூடுதலாக உள்ளது.
பின்வருவனவற்றுள் சரியானது.




| | அலகு கனவளவில் உள்ள கடத்தும் இலத்திரன்களின் எண்ணிக்கை | இலத்திரன்களின் மோதுகைக்கான சராசரி நேரம் |
|---|---|---|
| 1. | X இலும் Y இலும் சமன் | X இலும் Y இலும் சமன் |
| 2. | X இலும் Y இலும் சமன் | X இனதிலும் Y இல் குறைவு |
| 3. | X இலும் Y இலும் சமன் | X இனதிலும் Y இல் கூட |
| 4. | X இனதிலும் Y இல் கூட | X இனதிலும் Y இல் கூட |
| 5. | X இனதிலும் Y இல் கூட | X இனதிலும் Y இலும் சமன் |

(தொடரும்....)